# சிறையில் ஒரு பறவை

ராஜேஷ்குமார்



MithraVintha

**உள்ளே...**


| | |
|---|---|
| சிறையில் ஒரு பறவை | 5 |
| அழகிய தீயே! | 94 |
| பெண்ணால் முடியும் | 193 |


★ ★ ★


F2

3007


# சிறையில் ஒரு பறவை




போலீஸ் ஜீப் துடைத்து வைத்த மாதிரிக் கிடந்த திவான்பகதூர் சாலையில் அந்தக் காலை வேளையில் சீறிக்கொண்டு போனது. ஜீப்புக்குள் இரண்டு கான்ஸ்டபிள்கள் இருந்தார்கள்.

முன்புறம் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனும், சப்-இன்ஸ்பெக்டர் முகுந்தனும் அமர்ந்திருந் தார்கள்.

வானம் தன் முகத்துக்கு வெளிச்சத்தை பவுடர் மாதிரிப் பூசிக் கொள்ள ஆரம்பித்திருந்தது.

கார்த்திகேயன் தன் ரிஸ்ட் வாட்சைப் பார்த்தார்.

பால் பூத்களில் க்யூ வரிசைகள் தெரிந்தன. நாய்க் குட்டிகளுடன் சிலர் வாக்கிங் போனார்கள். பெட்டிக்கடை முகப்புகளில் கிழங்கள் பேப்பரும், அரசியல் அரட்டையு மாய்க் கண்ணில் பட்டார்கள்.

ரத்தின விநாயகர் கோயிலில் தீபாராதனை விருட்டென்று தெரிந்து மறைந்தது.


Mithra Vintha

கார்த்திகேயன் கேட்டார்.

"ஃபோன் எப்ப வந்தது?"

முகுந்தன் பதில் சொன்னார்.

"கொஞ்சம் முன்னாடிதான். ஒரு பதினைஞ்சு நிமிஷம் இருக்கும்..."

"ஃபோன் பண்ணினது யாரு?"

"வேலைக்காரப் பொம்பளை... சாரதான்னு பேர் சொல்லிச்சு."

"என்ன நடந்ததுன்னு தெரியலையா?"

"அந்தப் பொண்ணு தெளிவா சொல்லலை... திக்கல் திணறலோட பேசினா... அவ சொன்ன விலாசம் புரிஞ்சது... அவளோட எஜமானியம்மாவுக்கு என்னவோ ஆபத்துன்னு புரிஞ்சது... நிறைய பயந்து போயிருக்கா. உடனே வாங்க உடனே வாங்கன்னு மட்டும் திருப்பித் திருப்பிச் சொன்னா..."

"உங்களாலே ஏதும் கெஸ் பண்ண முடியுதா?"

"முடியலை ஸார்..."

"ஃபோன் வந்தது, டாக்டர் மோகன்குமார் வீட்டிலிருந்து! மோகன்குமார் ஊர்ல பெரிய டாக்டர் மட்டுமில்லை... நம்ம கமிஷனருக்கு க்ளோஸ் ஃப்ரெண்ட் வேற. நாளைக்கு ஏதாவதுன்னா... கமிஷனர் நம்மைக் கூப்பிட்டுக் காயக் கூடாது பாருங்க..."

"எத்தையெல்லாம் அனுசரிச்சுப் போக வேண்டியிருக்கு!"



முகுந்தன் சலித்துக் கொண்ட போது - ஜீப் 'சர்க்'கென்று பிரேக் அடித்து அந்த பங்களாவை நோக்கித் திரும்பியது.

காம்பவுண்ட் கேட் திறந்தே கிடக்க-

க்ரோட்டன்ஸ் செடி வரிசைகளைக் கடந்து போர்டிகோவைத் தொட்டது ஜீப். போர்டிகோவில் மேற்பரப்பு முழுவதும் போகன்வில்லா கொடி ரோஸ்மில்க் நிறப் பூக்களோடு பூத்துக் கிடந்தது.

சிட் அவுட்டிலிருந்து பதட்டத்துடன் ஓடி வந்தாள் அந்த வேலைக்காரி.

"இன்ஸ்பெக்டரய்யா... சீக்கிரமா வாங்க..."

பச்சை நிறத்தில் நூல் புடவையைச் சுற்றியிருந்தாள், வேலைக்காரி சாரதா. அழகாயிருந்தாள். அவளைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றார்கள் கார்த்திகேயனும் - முகுந்தனும்.

பெரிய சைசில் ஹால் வந்தது.

ஹாலின் தரை விரிப்பு நிறையக் கலைந்து போயிருந்தது. ஒன்றிரண்டு பிரம்பு நாற்காலிகள் தலை குப்புறக் கிடந்தன. ஷோகேஸ் கண்ணாடி - சில்லுகளாய்த் தரையில் உதிர்ந்து கிடந்தது. டீபாய் மேல் இருக்க வேண்டிய ஃப்ளவர் வாஸ் சுவர் ஓரமாய் உருண்டு கிடந்தது.

"என்ன நடந்தது...?"

வேலைக்காரியை அதட்டலாய்க் கேட்டார் கார்த்திகேயன்.

அவளுடைய உடம்பு நடுங்கியது. "அய்யா... நாலைஞ்சு பேர் திடும்னு வீட்டுக்குள்ளே வந்து... அம்மாவைக் கட்டிப் போட்டுட்டு... அய்யாவை..."

MithraVintha

பேச முடியாமல் பீறிட்டு வந்த அழுகையைச் சேலைத் தலைப்பால் பொத்திக் கொண்டாள்.

"அம்மா எங்கே?"

சாரதா ஹாலை ஒட்டின பக்கவாட்டு அறைக்குள் நுழைந்தாள்.

"அம்மா இங்கதான் இருக்காங்க..."

அந்த அறையை நெருங்கிய போது-

"ம்... ம்...ம்..." என்று பலஹீனமான அனத்தல் சத்தம் காதில் விழுந்தது.

இருவரும் உள்ளே நுழைய-

நாற்காலியோடு பிணைக்கப்பட்டுக் கிடந்தாள் டாக்டர் மோகன் குமாரின் மனைவி கமலா. கத்த முடியாமல் வாயைத் துணியால் இறுக்கிக் கட்டி இருந்தார்கள். மூச்சுவிடத் திணறி அரை மயக்கத்தில் இருந்தாள்.

சாரதா பதட்டமாய்ச் சொன்னாள்.

"இறுக்கமா சேர்த்துக் கட்டியிருக்காங்க... என்னால அவுக்க முடியலை..."

முகுந்தன் செயல்பட்டார்.

வாய்க் கட்டை முதலில் அவிழ்த்தெறிந்தார். பெரிய துணிப்பந்தை வாயில் திணித்துக் கட்டியிருந்தார்கள். கட்டை அவிழ்த்ததுமே கமலா வாய் நிறையக் காற்றை வாங்கினாள். உடலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கயிறையும் அவிழ்த்துப் போட்டார் முகுந்தன்.



சாரதா ஜக் தண்ணீரை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள். கமலாவின் முகத்தில் தெளித்தாள். கான்ஸ்டபிள்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

"முகமூடித் திருடர்களா இருக்குமா?"

"ஊஹூம்... அந்தம்மா காதில் பாரு... வைர பேசரி! அப்படியே இருக்கு. கழுத்தில் கனமா ஒரு தங்கச் செயின்! முகமூடிக் கொள்ளைக்காரன் இதை யெல்லாம் மிச்சம் வெச்சிட்டுப் போக மாட்டான்..."

"அப்படின்னா...?"

"சம் திங் ராங். வேற என்னமோ நடந்திருக்கு!"

குளிர்ந்த நீர் முகத்தில் பட்டதும் - உணர்வு திரும்பி - கண் விழித்தாள் கமலா. அவளுக்கு 'நாற்பது வயது' - என்பது கண்களுக்குக் கீழே இருந்த கருவளையத்திலும், நாசிக்குப் பக்கத்தில் இருந்த ஒற்றைச் கருக்கத்திலும் தெரிந்தது.

கண் விழித்த கமலா, இன்ஸ்பெக்டர் யூனி∴பார்ம்களைக் கண்ணில் வாங்கியதும், சற்று அவசரத்துடன் குரலை வெளியிட்டாள்.

"இ... இன்ஸ்பெக்டர்... அ... அவங்க... அவங்க... என்னோட கணவரை... ப்ளீஸ்... அவரைக் காப்பாத்துங்க..."

"பதட்டப்படாதீங்க... நடந்ததை விளக்கமா சொல்லுங்க..."

"அந்தப் பாவிங்க என்னோட கணவரை இழுத்துக்கிட்டு போயிட்டாங்க."

"யாரு...?"

MithraVintha

"அவங்க யார்னு எனக்குத் தெரியலை..."

"அவசரப்படாமே...நிதானமா சொல்லுங்க."

"விடிகாலை நாலு மணி இருக்கும்... திடீர்னு கதவைப் படபடன்னு யாரோ தட்டினாங்க... நான் எந்திரிச்சுப் போய் ஜன்னல் வழியா பார்த்தேன்... வெளியே நாலைஞ்சு பேர் இருந்தாங்க. டாக்டரை உடனே பார்க்கணும்... குழந்தைக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க... கம்பளியால சுத்தி வெச்சிருந்த குழந்தையைக் காட்டினாங்க... அவரை எழுப்பிப் பார்த்தேன்... இப்படி அன்டைம்ல தொந்தரவு பண்றதை அவர் எப்பவும் விரும்பமாட்டார்... அவங்களை க்ளினிக்குக்கு கொண்டு போகச் சொல்லிட்டுப் படுத்திட்டார்... வெளிய இருந்தவங்ககிட்ட நான் சொன்னேன்... ஆபரேஷனை முடிச்சுட்டு டாக்டர் லேட்டாதான் படுத்தார்... க்ளினிக் போனீங்கன்னா வேற டாக்டர்ஸ் இருப்பாங்கன்னு சொன்னேன்... ஆனா அவங்க குழந்தையைக் காட்டிக் கதறினாங்க... 'குழந்தை கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டிருக்கு... க்ளினிக் போக நேரமில்லை... டாக்டர் இப்ப ஏதாவது முதலுதவி சிகிச்சை குடுத்தார்னா அதுக்கப்புறமா க்ளினிக் கொண்டு போயிடறோம்... தயவு பண்ணி அவரை எழுப்புங்கம்மா!'ன்னு கெஞ்சினாங்க... குழந்தையோட நிலையை நினைச்சு நான் இரக்கப்பட்டேன்... கதவைத் திறந்து அவங்களை முன் அறையில் உக்கார வெச்சுட்டு - உள்ளே போய் அவரை மறுபடி எழுப்பினேன்..."

சொன்னவள் திடீரென்று அழ ஆரம்பித்தாள்.

பின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தொடர்ந்தாள்.



"என்னோட கணவர் இரக்கமில்லாம நடந்துக்கறாரேன்னு நான் கோபப்பட்டேன்... ஆனா... ஆனா... அவர் நடந்து கிட்டதுதான் சரின்னு எனக்கு இப்ப படுது... நான் இரக்கப்பட்டது தப்பு இன்ஸ்பெக்டர்..."

"நடந்தது என்னன்னு சொல்லுங்க..."

"அவங்க கொண்டு வந்தது குழந்தையே இல்லை. சாதாரண பொம்மையைத்தான் அப்படிக் கொண்டு வந்திருக்காங்க... அவங்க ஆடின நாடகத்தை நிஜம்ன்னு நம்பி நான் ஏமாந்துட்டேன்..."

"டாக்டரை என்ன செஞ்சாங்க...?"

"அடிச்சு குண்டுகட்டா காரில் தூக்கிப் போட்டுக்கிட்டு போயிட்டாங்க. சத்தம் போடாமலிருக்க என்னை சேர்ல கட்டிப் போட்டுட்டு... அவரைக் கடத்திட்டுப் போய்ட்டாங்க..."

"எத்தனை பேர் வந்தாங்க?"

"நாலு பேர்..."

"யார் அவங்க... அடையாளம் தெரிஞ்சுதா?"

"தெரியலை... ஆனா அவங்க பேசிக்கிட்டதை வெச்சுப் பார்த்தா... அவங்க ஏதோ தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவங்கன்னு புரிஞ்சுக்க முடிஞ்சுது..."

"அவங்க இவரை எதுக்காகக் கடத்தணும்...?"

"தெரியலை..."

"வேலைக்காரி சாரதா எப்ப வந்தா?"

Mithra Vintha

"எப்பவும் போல அஞ்சே முக்காலுக்கு வந்தா...! கயிறு இறுக்கமாகக் கட்டியிருந்ததால் அவளால அவிழ்க்க முடியலை... சைகையால் நான் டெலிபோனைக் காட்டி போலீசுக்கு ஃபோன் பண்ணச் சொன்னேன்... அப்புறம்தான் நீங்க வந்திருக்கிங்க... வாயில் துணிப் பந்தை வெச்சு அடைச்சிருந்ததால என்னால சரியா மூச்சுவிடக்கூட முடியாம மயக்கமாயிட்டேன்..."

அவள் சொல்லிக் கொண்டிருந்தபோது-

வெளியே இருந்து அந்த கான்ஸ்டபிள் அவசரமாய் உள்ளே வந்தார்.

"ஸார்..."

கார்த்திகேயனும், முகுந்தனும் திரும்பினார்கள்.

"என்ன?"

"இதைப் பாருங்க ஸார்..."

பார்த்தவர்கள்-

லேசாய்த் திடுக்கிட்டார்கள்.




'தேர்ட் ஐ' டிடெக்டிவ் ஏஜென்சி.

ஃபோன் அடித்து சுரேன் காதில் ரிஸீவரை வைத்தான். பக்கவாட்டு மேஜையில் உட்கார்ந்து டைப் அடிக்கிற கவிதா அவன் போன் பேசுவதை உத்தேசித்துக் கொஞ்ச நேரத்துக்கு டைப் சத்தத்தை நிறுத்தினாள்.



"எஸ்... சுரேன் ஹியர்......"

"..."

"ஓ... நீங்களா! வணக்கம் ஸார்..."

"..."

"இன்னும் போகலை ஸார்..."

"..."

"நாலு மணிக்கு...!"

"..."

"எஸ்...ஷ்யூர்...!"

"..."

"கவலைப்படாதீங்க... காலைல ரிப்போர்ட் வந்துரும்... ரிஸீவரை வெச்சுரட்டுமா?"

கேட்டுக் கொண்டே-

ரிஸீவரைச் சாத்தினான் சுரேன்.

"யாரு?" என்றாள் கவிதா.

"நிஜங்கள் எடிட்டர் பேசினார்..."

"என்ன கேட்டார்?"

"எப்ப ஜெயிலுக்குப் போறீங்கன்னு கேட்டார்."

"விளையாடாதீங்க..."

"விளையாடலை. அவர் கேட்டதைத்தான் சொன்னேன்! ஜெயிலர் நாலு மணிக்கு மேல்தான் எங்களை வரச்

Mithra Vintha

சொன்னார்... அதனால நாலு மணிக்குத்தான் போவோம்னு சொன்னேன்."

"ஓ! கைதி தர்மராஜை இன்டர்வியூ பண்ணப் போறதைப் பத்திக் கேட்டாரா!"

"எஸ்..."

"ஏஜென்சி வேலைகளே நமக்குத் தலைக்கு மேல இருக்கு. இடையில் இந்தப் பத்திரிகைத் தொண்டெல்லாம் நமக்குத் தேவைதானா? இனிமே அந்த எடிட்டர் சொன்னா நீங்க பாலிஷா மறுத்துடுங்க. பேட்டி - பிடுங்கலெல்லாம் நமக்கு வேண்டாம்."

"நானும், நீயும் சேர்ந்து சில சமயம் வெட்டி அரட்டை அடிக்கிறோமே... அந்த நேரத்தில் ஏதோ நம்மாலான உதவியை அவருக்குச் செய்யறோம்... இதில் நமக்கும் ஆதாயம் இருக்கு கவிதா..."

"என்ன ஆதாயம்?"

"நம்ம தொழிலுக்கு - பத்திரிகை சப்போர்ட் ஒரு கூடுதல் சக்தி! 'நிஜங்கள்' பத்திரிகை நமக்கு உதவியிருக்கலைன்னா தர்மராஜை ஜெயில்ல போட்டிருக்க முடியுமா? அவனுக்கு எத்தனை பெரிய அரசியல் சப்போர்ட் இருக்கு...! அந்த பொலிடிகல் பேக்கிரவுண்டுக்கு முன்னால நாம எதுவுமே செய்ய முடியாம சத்தமில்லாம ஜகா வாங்கியிருப்போம்... இப்படி ஒரு பத்திரிகை பலம் மட்டும் நம்ம கையில் இருந்திருக்கலைன்னா அந்த கேசில் நாம தோத்திருப்போம்... இதை நீ மறுக்கறியா...?"

"இல்லை..."



"இப்ப என்ன சொல்றே...?"

"என் முந்திரிக்கொட்டை ஆலோசனைக்கு ஸாரி!"

"உனக்கு எப்பவுமே லேட் ஞானோதயம்தான்."

கவிதா டைப்ரைட்டரின் உறையை மூடினாள்.

ஆபீஸைப் பூட்டிக் கொண்டு - முதல் ப்ளோர் வராந்தாவைக் கடந்தார்கள். படிகள் வழியே இறங்கி க்ரவுண்ட் ஃப்ளோரைத் தொட்டு - மர நிழலில் இளைப்பாறும் யமஹாவை அடைந்தார்கள்.

சுரேன் கிக்கரை உதைத்தான்.

கவிதா பில்லியனில் உட்கார்ந்து கொண்டதும் கியரை மாற்றி ஆக்சிலேட்டரை முறுக்கினான்.

சைலன்சரில் புகையை உதறிவிட்டு உறுமிய பைக் ட்ராஃபிக் இல்லாத சாலைகளில் சீறிக் கொண்டு போனபோது அவனை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் கவிதா.

"வேகம் ஜாஸ்தி சுரேன். உங்ககூட பைக்கில் போனா உயிரைக் கையில் பிடிச்சுக்கிட்டு உக்காந்திருக்க வேண்டியிருக்கு."

சுரேன் சிரித்துக் கொண்டே - தன் வயிற்றைச் சுற்றிப் பிடித்திருந்த அவள் கையைக் காட்டிக் கேட்டான்.

"நீ உயிரை எங்கே பிடிச்சிருக்கே... என்னை இல்ல பிடிச்சிருக்கே...!"

"என் உயிர் நீதானே!" என்று பாடிச் சிரித்தாள் கவிதா.

MithraVintha

பத்து நிமிஷங்களுக்குப் பின் - பைக் 'மத்திய சிறைச்சாலை' என்ற அரைவட்ட போர்டு வைத்திருந்த காம்பவுண்டை நெருங்கி-

இடது புறம் திரும்பி - அந்த காம்பவுண்டுக்குள் திரும்பியது.

ஜெயிலின் பிரம்மாண்டமான முகப்புக் கதவைத் தொட்டதும் - கட்டட நிழலில் பைக்கை ஸ்டாண்ட் இட்டான்.

ரை:ஃபிளுடன் நின்றிருந்த சென்ட்ரியிடம் சொல்லிக் கொண்டபின் - அவர் திறந்து கொடுத்த சிறிய விக்கெட் கதவின் வழியே உள்ளே நுழைந்தார்கள் சுரேனும், கவிதாவும்,

ஜெயிலர் பத்ரிநாத்தின் அறையை அடைந்தார்கள்.

பத்ரிநாத் சற்றே தாட்டியான உடம்புடன் இருந்தார். மெலிசான ஃபிரேமில் கண்ணாடி போட்டிருந்தார். முறுக்கி விடப்பட்ட மீசையில் நரைமுடிகள் கணிசமாய்த் தெரிந்தன. வலது கன்னத்தில் இரண்டு சென்டிமீட்டர் நீளத்துக்கு ஒரு வெட்டுத் தழும்பு மினுமினுப்பாய்த் தெரிந்தது.

"வணக்கம் ஸார்!"

நிமிர்ந்தவர், இவர்கள் இருவரையும் பார்த்துவிட்டு - மெல்லப் புன்னகைத்தார்.

"வாங்க... உட்காருங்க."

அவருக்கு எதிரே இருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். ரிவால்விங் சேரில் அரைவட்டம் சுற்றிக் கொண்டே அவர் பேசினார்.



"மிஸ்டர் சுரேன்... நீங்க சந்திக்க விரும்பும் ஆள் - எந்த மாதிரி ஆபத்தான ஆசாமின்னு நீங்க மொதல்ல புரிஞ்சுக்கணும். ஒண்ணில்ல... ரெண்டில்ல... ஒன்பது கொலைகளைப் பண்ணினவன்..."

சுரேன் குறுக்கிட்டான்.

"அந்த தர்மராஜை எங்களுக்கு நல்லாவே தெரியும் ஸார்! அவனை உள்ளே போடறதில் எங்களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது...! அவனோட முக்கியத்துவம் எங்களுக்கு நல்லாவே புரியும்."

"இருக்கலாம். யூ ஆர் ப்ரஸ் பீப்பிள்ஸ்... கைதிகள்கிட்டே காட்ட வேண்டிய சில நெளிவு சுழிவுகள் உங்களுக்குத் தெரியாது..."

"யூ ஆர் ராங். பேசிக்கலி வி ஆர் டிடெக்டிவ் ஏஜெண்ட்ஸ்! நீங்க அதிகமா கவலைப்படறீங்க. பேட்டியை நாங்க ஸ்மூத்தா முடிச்சிக்கிட்டு வந்துருவோம்..."

"நான் கவலைப் பட்டுத்தான் ஆகணும். உள்ளே என்ன நடந்தாலும் மேல் அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டியவன் நான்தான்..."

"எங்களை நீங்க நம்பலாம்."

"இருபது நிமிஷம்தான் உங்களுக்குத் தர முடியும். அதுக்குள்ளே பேட்டியை முடிச்சுக்கங்க..."

"தாங்க் யூ ஸார்..."

ஜெயிலர் பத்ரிநாத் பஸ்ஸரைத் தட்ட, வார்டன் ஒருவர் அங்கே வந்தார்.



Mithra Vintha

"ஸார்...!"

"தர்மராஜ் செல்லுக்கு இவங்களைக் கூட்டிட்டுப் போங்க. அவன் இன்னிக்குப் பெரிய மனுஷன் ஆயிட்டான்! பேட்டி எடுக்கறாங்களாம்..."

கவிதா கிசுகிசுத்தாள்.

"இவரையும் சின்னப் பேட்டி எடுத்துருவோமா...? இவ்வளவு பெரிய தொப்பை வளர நீங்க என்ன பயிற்சி எடுத்துக்கிட்டீங்கன்னு கேக்கட்டுமா...?"

"பேசாம வா..."

அந்த வார்டன் பின்னால் நடந்தார்கள்.

ரொம்பவும் தனிமைப் பட்டிருந்த கடைசி செல்லை அடைந்தார்கள்.

பூட்டைத் திறந்து கதவைத் தள்ளினார் வார்டன். 'க்றீச்' சென்ற சப்தத்துடன் திறந்தது, கம்பிகளால் வேயப்பட்ட அந்தக் கதவு.

வார்டன் கதவருகே நின்று கொள்ள-

கவிதாவும், சுரேனும் உள்ளே போனார்கள்.

சிமெண்ட் திட்டில் உட்கார்ந்திருந்த தர்மராஜ், அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தான். கட்டம் போட்ட வெள்ளை சர்ட் - அரை ட்ராயரில் தொளதொளவென்றிருந்தான்.

"இன்னிக்கு நீங்க வருவீங்கன்னு ஜெயிலர் ஸார் சொன்னார்..."

"எப்படி இருக்கே தர்மராஜ்?"



"வெளியே இருக்கும்போது கூட இப்படி ஒரு நிம்மதி எனக்குக் கிடைச்சது இல்லை... சந்தோஷமா இருக்கேன்."

"போன தடவை உன்னைப் பார்த்தப்ப ரொம்பவும் பயந்து போயிருந்தே!"

அவன் மறுபடி மெலிதாகச் சிரித்தான்.

"அப்ப புதுசு. இந்த ஒரு மாசத்தில் எல்லாம் பழகிப் போச்சு. இனிமே என் பாதை எதுன்னு தெரிஞ்சிருச்சு. நேரம் போக கீதை படிச்சிட்டிருக்கேன். எதிர்காலத்துக்கான பயம், திட்டம், கவலை எதுவும் மனசில் இல்லை... முழுசுமா நிகழ்காலத்தில் மட்டுமே சிந்தனை இருந்தா அதுதான் நிம்மதி."

"பெரிய தத்துவ ஞானி மாதிரி பேசறியே...!"

"பத்து நாள் தன்னந்தனிமையிலே இருந்து பாருங்க... எல்லாத் தத்துவங்களும், எல்லா ஞானங்களும் தன்னால பிறக்கும்..."

"எதிர்காலத்தைப் பத்தி பயமோ, கவலையோ இல்லைன்னு சொல்றியே... நிஜமாவே சொல்றியா?"

"உங்ககிட்டே பொய் சொல்ல வேண்டிய அவசியமென்ன...? அது சத்தியமான வார்த்தை."

"இன்னும் உன் கேஸ் கோர்ட்ல முடியலை, தெரியுமா?"

"தெரியும்."

"உனக்குத் தூக்குத் தண்டனைதான் கிடைக்கும்."

"தெரியும்."

"அது பத்திக் கவலை இல்லையா?"

Mithra Vintha

"விடுதலை கிடைச்சா சந்தோஷப்படறதுதானே நியாயம்! எதுக்காகக் கவலைப்படணும்?"

"விடுதலையா? உனக்கா?"

"ஆமா! என்னைப் பொறுத்தவரைக்கும் தூக்குத் தண்டனைதான் பெரிய விடுதலை! சாவுக்குப் பிறகுதான் மனிதனுக்கு மிகப் பெரிய இன்பங்கள் காத்திருக்குன்னு நேத்திக்கு ஒரு புஸ்தகத்துல படிச்சேன்... அந்த புஸ்தகத்தைப் படிச்சீங்கன்னா சாகறதுக்கு ஆசைப்பட ஆரம்பிச்சிடுவிங்க..."

"இப்ப உன் பேச்சைக் கேட்டா நீ ஒன்பது கொலை செஞ்சவன்னு யாரும் நம்ப மாட்டாங்க. உன்கிட்டே நிறைய மெச்சூரிட்டி வந்திருக்கு. அன்னிக்கு செஞ்ச கொலைகளுக்காக வெட்கப்படறியா தர்மராஜ்?"

"ம்ஹூம்! அன்னிக்கு அதைச் செய்யலைன்னா... இன்னிக்கு நீங்க சொல்ற இந்த மெச்சூரிட்டி கிடைச்சிருக்குமா? சமூகம்தான் மனுஷனை உருவாக்குது. ஒருத்தனை டாக்டரா... ஒருத்தனை வக்கீலா... ஒருத்தனை மந்திரியா... ஒருத்தனைப் பிச்சைக் காரனா... என்னைக் கொலைகாரனா உருவாக்கிச்சு... அதை நினைச்சு நான் ஏன் வெக்கப்படணும்?"

"சமூகம்னு எதைச் சொல்றே...?"

"என்னைச் சுத்தி இருந்தவங்களை...! என்னைச் சுத்தி இருந்தவங்க எல்லாரும் சமூகத்தில் பெரிய மனுஷங்க. அவங்கதான் என்னைக் கொலைகாரனா வளர்த்தாங்க...! நான் செஞ்ச ஒன்பது கொலைகளில் ஒண்ணுகூட என் சொந்த நலத்துக்காகச் செய்யலை... எல்லாமே அவங்களுக்காகத்தான் செஞ்சேன்..."

"ஆனா தண்டனை உனக்குத்தானே...?"

"இன்னும் கோர்ட்ல தண்டனை தீர்ப்பாகலை...! நீங்க சொன்ன மாதிரி எனக்குத் தூக்குத் தண்டனை குடுத்தாங்கன்னா சாகறதுக்கு முந்தி எல்லா உண்மைகளையும் சொல்லிட்டு நான் சாவேன்..."


வார்டன் லத்தியால் கம்பியைத் தட்டினார்.

"டயம் முடிஞ்சது..."

"இன்னும் ஒரே ஒரு கேள்வி கேட்டுக்கறோம்..."

"ஸாரி... ஜெயிலர் ரொம்ப ஸ்ட்ரிக்ட். குடுத்த டயத்துக்கு மேல ஒரு நிமிஷம் நீங்க உள்ளே இருந்தாலும் கோபிச்சுக்கு வார்..."

இருவரும் - தர்மராஜைப் பார்த்துக் கொண்டே - வெளியே வந்தார்கள். அவன் கையில் வைத்திருந்த பகவத் கீதை புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டான்.




**கா**ன்ஸ்டபிள் தன் கையில் வைத்திருந்த அந்த வெள்ளைத் தாளை இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனிடம் நீட்டினார்.

"ஜன்னல் திட்டு மேல் வெச்சிருந்தது ஸார்."

கார்த்திகேயன் அதை வாங்கினார்.

பளீர் வெள்ளைத் தாள்.

ரத்தச் சிவப்பில் எழுத்துக்கள் ஓடியிருந்தன.

டாக்டர் மோகன்குமார்க்கு ஆயுள் அரெஸ்ட்.

Mithra Vintha

-இப்படிக்கு... தீப்பொறிகள்.'

முகுந்தன் கவலையாய்ச் சொன்னார்.

"ரொம்ப ஆபத்தான இயக்கமாச்சே...!"

"அதென்ன ஆயுள் அரெஸ்ட்?"

"அவங்களோட வழக்கமான வார்த்தை!"

"அர்த்தம்?"

"ஏதோ காரணத்துக்காக அவங்க இயக்கத்துக்கு டாக்டர் மோகன்குமார் தேவைப்படறார்... ஸோ அவரைக் கடத்திட்டாங்க... இனிமே அவர் ஆயுசுக்கும் அந்த இயக்கத்தில்தான் இருந்தாகணும். திரும்ப முடியாது... 'ஆயுள் அரெஸ்ட்'ங்கற வார்த்தைக்கு அர்த்தம் இதுதான். ஏற்கெனவே ரெண்டு மூணு பேரை இது மாதிரிக் கடத்தியிருக்காங்க..."

"எதுக்காக இந்த எச்சரிக்கைக் கடிதம்...?"

"இனிமே மோகன்குமாரைத் தேட வேண்டாம்ங்கறதுதான் எச்சரிக்கையோட உள்நோக்கம். இவங்களால ஆயுள் அரெஸ்ட் பண்ணப்பட்ட ஒரு ப்ரொ'ஃபசரைக் கண்டுபிடிக்க முயற்சி செஞ்ச ஒரு போலீஸ் ஆபீசருக்குப் பல தடவை இதே மாதிரி எச்சரிக்கைகள் வந்தது... அவர் அதை யெல்லாம் அலட்சியப்படுத்திட்டு தடயங்களோட முன்னேறிட்டே போனார்... ஒரு ஸ்டேஜில் அந்தப் பரிதாபம் நடந்தது. அவர் பைக்கில் டைனமைட் வச்சு பைக்கோட சிதறிட்டார்."

இன்ஸ்பெக்டர் கமலாவை ஏறிட்டார். "மிஸஸ் மோகன்குமார்... வந்தவங்க நாலு பேரையும்... உங்களாலே அடையாளம் சொல்ல முடியுமா..? மறுபடி பார்த்தா அவங்களை ஐடென்ட்டி'ஃபை பண்ணுவீங்களா?"



"வந்தவங்கள்ல ஒரு ஆள் மட்டும் சரியா முகத்தைக் காட்டலை... மத்த மூணு பேரையும் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... அவங்களை எங்கே பார்த்தாலும் அடையாளம் தெரிஞ்சுக்குவேன் இன்ஸ்பெக்டர்..."

"அவங்க எப்படி இருந்தாங்க...?"

"வித்தியாசமா எதுவும் அவங்க முகத்துல தெரியலை... சாதாரணமா இருந்தாங்க... ரெண்டு பேர் தாடி வெச்சிருந்தாங்க..."

முகுந்தன் குறுக்கிட்டார்.

"எக்ஸ்க்யூஸ் மி ஸார்..."

"சொல்லுங்க முகுந்தன்..."

"இவங்க சொல்றதைப் பார்த்தா - 'தீப்பொறி' போர்வையில் வேற யாராவது ஏன் இந்தக் கடத்தலைச் செஞ்சிருக்கக் கூடாது...?"

"வேற யாராவதுன்னா...?"

"டாக்டர் மோகன்குமாரின் தொழில்முறை எதிரிகள் அல்லது அவர்கிட்டே முன் விரோதமுள்ள உறவுக்காரங்க யாராவது..."

"வாய்ப்பிருக்கு... இந்தக் கோணத்தையும் நாம எடுத்துக்கணும்..."

சொன்ன கார்த்திகேயன் கமலாவிடம் திரும்பினார்.

"இவர் சொல்ற மாதிரி... தொழில் ரீதியாகவோ... அல்லது சொந்தக்காரங்களிலோ... இவர் மேல கோபமா இருக்காங்களா?"

Mithra Vintha

"ஆஸ்பிடல் விவகாரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது."

"உறவுக்காரங்கல்ல யாராவது...?"

"உறவுக்காரங்க எல்லாருமே அவர் மேல நல்ல அபிப்பிராயம்தான் வெச்சிருக்காங்க. அவர் சொந்தக்காரங்க எல்லாருக்குமே நிறைய உதவிகள் செஞ்சிருக்கார்... உறவுக்காரங்க நிச்சயமா இந்தக் காரியத்தைச் செஞ்சிருக்க மாட்டாங்க..."

"கடத்தல் ஆசாமிங்க நிச்சயமா ஏதாவது வாகனத்தில்தான் வந்திருக்கணும்னு நினைக்கறேன்..."

"என்னைக் கட்டிப் போட்டுட்டு - அவரைக் கூட்டிட்டு வெளியே போனாங்க. கொஞ்ச நேரத்தில் வெளியே கார் சத்தம் கேட்டது..."

"சத்தத்தை வெச்சு அது என்ன கார்னு உங்களாலே சொல்ல முடியுமா?"

கமலா மறுத்துத் தலையசைத்தாள். "ஐ..கான்ட்."

"பக்கத்துல விசாரிச்சா தெரியும், முகுந்தன்..."

"சுத்திலும் பங்களா டைப் வீடுகள்... அதிகாலை நாலு மணிக்கு நடந்த இந்தச் சம்பவத்தை மத்தவங்க கவனிச்சிருப்பாங்களான்னு சொல்ல முடியாது... ஸார்."

"விசாரணை பண்ணிப் பார்க்கலாம்..."

அந்த அறையிலிருந்து வெளிப்பட்டு - ஹாலைக் கடந்து - போர்டிகோ, படிகளில் இறங்கினார்கள். அப்பால் சற்று தொலைவில் இடது பக்கமும் - வலது பக்கமும் அடுத்த பங்களாக்கள் தெரிந்தன.

90007



இடப்புறம் இருந்த பங்களாவை நெருங்கி - காலிங் பெல்லை அழுத்தினார்கள்.

உள்ளே சப்தம் சிதறின. சில விநாடிகளுக்குப் பின் - ஒரு நாற்பது வயதுப் பெண்மணி வெளிப்பட்டாள். இன்ஸ்பெக்டர் உடைகளைப் பார்த்து லேசாய்ப் புருவங்களை நெரித்தாள்.

"எ... என்ன வேணும்...?"

"பக்கத்து பங்களாவில் ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கு. அது சம்பந்தமாக உங்ககிட்டே சின்ன விசாரணை..."

"என்ன நடந்தது அங்கே?"

கேட்டபடி - சற்று எம்பி - கமலாவின் பங்களாவைப் பார்த்தாள் அவள்.

"டாக்டர் மோகன்குமாரை யாரோ சிலர் கடத்திட்டுப் போய்ட்டாங்க..."

"க... கடத்திட்டாங்களா...? எப்போ?"

"இன்னிக்கு விடிகாலை நாலுமணி சுமாருக்கு!"

அவள் நெஞ்சில் கை வைத்துப் பயந்தாள்.

"காலைல நாலு மணி சுமாருக்கு அங்கிருந்து ஏதாவது சத்தம் கேட்டதா உங்களுக்கு...?"

"இல்லை," என்று தலையாட்டிவிட்டுத் தொடர்ந்து சொன்னாள்.

"நாங்க எல்லாருமே அசந்து தூங்கற ரகம். பெட்ரூம்ல ஏசி சத்தம் வேற சன்னமா உறுமிட்டிருக்கறதால் - பெட்ரூமுக்கு வெளியே இடியே விழுந்தாலும் -

Mithra Vintha

"இங்கே உங்களைத் தவிர யார் யார் இருக்காங்க?"

"நான்... என் மகன், மகள், அவர்..."

"அவங்க எல்லாம் எங்கே?"

"மகனும், மகளும் ஜாகிங் போயிருக்காங்க. அவர் கம்பெனிக்குப் போயிருக்கார்..."

ஏமாற்றத்தோடு வெளியே வந்தார்கள்.

முகுந்தன் சொன்னார்.

"இந்தம்மா நம்மைத்தான் கேள்வி கேட்டு விஷயத்தைத் தெரிஞ்சுக்கிட்டாங்க. நமக்கு அந்தம்மாகிட்டே இருந்து ஒரு தகவலும் பெயரலை..."

"வாங்க. வலது பக்கம் இருக்கற பங்களாவிலும் என்கொயர் பண்ணிப் பார்த்துருவோம்..."

அந்த பங்களாவுக்குள் நுழைந்தபோது எங்கிருந்தோ அல்சேஷனின் குரைப்பு எதிரொலித்துக் கேட்டது.

சிட் அவுட் நாற்காலியில் சிகரெட் புகைக்கிடையே அந்தப் பெரியவர் தெரிந்தார். கையில் ஹிந்துவை விரித்து வைத்திருந்தார்.

கார்த்திகேயனையும், முகுந்தனையும் சற்றுக் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டே 'எஸ்' என்றார்.

பக்கத்து பங்களாவில் நடந்த அசம்பாவிதம் பற்றி முகுந்தன் சுருக்கமாய்ச் சொன்னதும்-

"மை குட்னஸ்!" என்றார்.

அவரே தொடர்ந்து-

PUBLIC LIBRARY



"இந்தக் கடத்தல் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது?" என்றார்.

"காலைல சுமார் நாலு மணி இருக்கும்..."

"அப்படின்னா நான் காலைல பார்த்தது அந்த கிட்நாப்பர்சைத்தானா...?"

"காலைல நீங்க பார்த்தீங்களா...?"

"வழக்கமாவே விடிகாலைல யூரின் போறதுக்காக ஒரு தரம் எந்திரிப்பேன்... அப்படித்தான் இன்னிக்கும் பாத்ரூம் போனேன்... பாத்ரூம் வென்ட்டிலேட்டர்ல இருந்து அவங்க வீட்டு போர்டிகோ நல்லா தெரியும். அங்கே நடமாட்டம் இருந்தது..."

"அவங்களைப் பார்த்தீங்களா?"

"நான் தூக்கக் கலக்கத்தில் இருந்தேன்... அந்த போர்டிகோவில் மங்கலான வெளிச்சத்தில் ஆட்களைப் பார்க்க முடியலை... ஒரு கார் வந்து நின்னதும் - அது கிளம்பிப் போனதையும் பார்த்தேன்..."

"கார் நம்பர்..."

"ஸாரி இன்ஸ்பெக்டர்... இங்கிருந்து நம்பரைப் பார்க்க முடியாது..."

"வந்தது என்ன கார்ன்னாவது சொல்ல முடியுமா?"

"அம்பாஸடர்..."

"கலர்...?"

"பிஸ்கட் கலர்..."

MithraVintha

"அவங்க வீட்டு காம்பவுண்டைக் கடந்ததும் கார் எந்தப் பக்கம் போச்சு...?

"இன்ஸ்பெக்டர்... கொஞ்சம் எம்பின மாதிரி பார்த்தாதான் கேட் தெரியும். வந்தது கடத்தல்காரங்க.. டாக்டர் மோகன் குமாரைக் கடத்திட்டுப் போறாங்கன்னு எனக்குத் தெரியாதே..."

"அன்டைமில் கார் வந்து போறது உங்களுக்கு வித்தியாசமாப் படலையா?"

"அது டாக்டர் வீடு... ஏதாவது அர்ஜென்ட் கேசா இருக்கும்னு நினைச்சேன்."

"தாங்க்யூ ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன்."

மீண்டும் கமலாவின் பங்களாவுக்கே

அவர்கள் வந்தபோது-

ஒரு அம்பாஸடர் கார் புழுதி கிளப்ப உள்ளே வந்தது.

அந்த அம்பாஸடரிலிருந்து ஒரு ஆணும் இளம்பெண்ணும் இறங்கினார்கள்.

## 4

காரினின்றும் இறங்கிய-முப்பது வயது இளைஞனையும் - இருபத்தைந்து வயதுப் பெண்ணையும் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் ஏறிட்டார். பெண்ணிடம் கமலாவின் சாயல் தெரிந்தது. அவள் பதட்டமாய்க் கேட்டாள்.

"இன்ஸ்பெக்டர்! என் அம்மாவோட உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"



"நோ... ஷி...ஈஸ் ஸேஃப்...! நீங்க...?"

"நான் டாக்டர் மோகன்குமாரோட டாட்டர்... ரூபா... இவர் என்னோட கணவர் பிரதாப்... வேலைக்காரி இப்பத்தான் போன் பண்ணி விஷயத்தைச் சொன்னா. உடனே புறப்பட்டு வர்றோம்... அப்பாவைக் கடத்திட்டுப் போனவங்க யார்ங்கிறதைக் கண்டுபிடிச்சுட்டீங்களா, இன்ஸ்பெக்டர்...?"

"தீப்பொறிகள்" என்கிற இயக்கம் ஒரு துண்டு சீட்டை எழுதி வெச்சுட்டுப் போயிருக்காங்க... சமீப காலமா... அவங்க... ஆட்களைக் கடத்தற இது மாதிரியான வேலையில் தீவிரமா இருக்காங்க..."

"எனக்குச் சந்தேகமாயிருக்கு, இன்ஸ்பெக்டர்...!"

"எதை மீன் பண்றீங்க...?"

"தீப்பொறிகள் என்கிற இயக்கத்தைப் பத்தி நான் பேப்பர், டி.வி. மூலம் கேள்விப்பட்டிருக்கேன்... இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல்வாதிகளையும், சினி ஸ்டார்களையும் கடத்திப் போய் அரசாங்கத்தை மிரட்டிச் சில காரியங்களைச் சாதிச்சுக்கிறதை வழக்கமா வெச்சுட்டு இருக்காங்க... அப்பாவைப் பொறுத்தவரைக்கும் அவர் ஒரு சாதாரண டாக்டர். எந்த அரசியல் கட்சியோடும் தொடர்பில்லாதவர்... தனிப்பட்ட முறையிலேயும் அவர் ஒரு வி.ஐ.பி. கிடையாது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் அவர் எதுக்காகக் கடத்தப் படணும்?"

"யூ... ஆர் கரெக்ட் மிஸஸ் ரூபா. ஆனா... தீப்பொறிகள் இயக்கத்துக்கு ஒரு டாக்டர் தேவைப்பட்டிருக்கலாம். ஒரு டாக்டர் தேவைங்கிற பர்ப்பஸுக்காக அவர் ஏன் கடத்தப் பட்டிருக்கக் கூடாது...?"

MithraVintha

ரூபாவும் அவளுடைய கணவன் பிரதாப்பும் வீட்டுக்குள் போனார்கள்.

இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனும், சப்-இன்ஸ்பெக்டர் முகுந்தனும் பின் தொடர்ந்தார்கள்.

"முகுந்தன்..."

"ஸார்..."

"டாக்டரோட ரூமை செக் பண்ணிட்டீங்களா...?"

"நாட் யெட் ஸார்..."

"செக் பண்ணிருங்க..! நான் ரூபா அண்ட் பிரதாப்கிட்டே ஃபர்தர் என்கொய்ரியைக் கண்டினியூ பண்றேன்."

"எஸ்... ஸார்..."

சொன்ன முகுந்தன் - ஹாலின் இடப்புறமாய் இருந்த டாக்டரின் பிரைவஸி அறைக்குள் நுழைந்தார். பதினாலுக்குப் பத்து என்று அளவுள்ள அந்த அறையினுள் பெரும் பாகத்தை அலமாரிகள் அடைத்திருக்க - புத்தகங்கள் வரிசையாய்த் தெரிந்தன. காலிகோ பச்சையில் பெயிண்ட் செய்யப்பட்ட புத்தகங்கள் தங்கநிற டைட்டில்களோடு கண்ணில் அடித்தன.

முகுந்தன் அலமாரிகளை விட்டுவிட்டு - மேஜையின் இழுப்பறைக்கு வந்தார். திறந்து பார்க்க- உள்ளே லெட்டர் பேட், க்ளினிக் வரைபடம், ஒரு குளிர் கண்ணாடி - பென் செட், ஸ்டேப்ளர், கம் பாட்டில், இரண்டு பக்கம் கூர் சீவிய பென்சில், வெளியூர் டாக்டர் நண்பர்களிடமிருந்து வந்த சில சாதாரணக் கடிதங்கள்.



சுவாரஸ்யமாய் எதுவும் தட்டுப்படாமல் போகவே, பத்து நிமிஷங்களை வெறும் தேடலில் மட்டுமே கழித்துவிட்டு வெளியே வந்தார் முகுந்தன். கார்த்திகேயன் சோபாவில் சாய்ந்தபடி ரூபாவையும் பிரதாப்பையும் விசாரித்துக் கொண்டிருந்தார்.

"அப்பாவுக்கு ஃப்ரண்ட்ஸ் சர்க்கிள் அதிகம் இல்லை...! அவருடைய எண்டர்டெய்ன்மெண்டே... சாயந்தரம் ஆறு மணிக்கு மேல் டாக்டர்ஸ் க்ளப்புக்குப் போய் பில்லியர்ட்ஸ் விளையாடிட்டு வருவார்... அப்பாகிட்டே இருக்கிற ஒரேயொரு கெட்ட பழக்கம் சிகரெட் பிடிப்பார்... பார்ட்டிகளில் கலந்துக்கும்போது -லிக்கர் எடுத்துக்குவார். அவ்வளவுதான்."

"உங்க ரெஸிடன்ஸ் எங்கே...?"

"தென்றல் நகர்ல... பாரா ஸ்ட்ரீட். முப்பத்திரண்டாம் நெம்பர் வீடு..."

"உங்கப்பாவை நீங்க கடைசியா என்னிக்குப் பார்த்தீங்க?"

"ரெண்டு நாளைக்கு முன்னாடி..."

"எங்கே பார்த்தீங்க...?"

"இதே... வீட்லதான்... நானும் என் கணவரும் வீட்டுக்குள்ளே நுழையும் போது அவர் ஒரு ஆபரேஷன் கேஸுக்காகக் கிளம்பிட்டிருந்தார்..."

கார்த்திகேயன் அழுது கொண்டிருந்த கமலாவிடம் திரும்பினார். "டாக்டர்க்கும் எந்த பேஷண்டுக்குமாவது - எந்த சந்தர்ப்பத்திலாவது... வாக்கு வாதம், சண்டை சச்சரவு வந்திருக்கா...?"

MithraVintha

"இல்லை..."

கார்த்திகேயன் முகுந்தனை ஏறிட்டார்.

"ரூமை செக் பண்ணீங்களா...?"

"எஸ்... ஸார்..."

"எனி... க்ளு...?"

"நாட் ஃபவுண்ட் ஸார்... ரூம் முழுக்க புக்ஸ்தான்..." முகுந்தன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே... போர்டிகோ வாசலில் உறுமலோடு அந்த பைக் வந்து நின்றது. காதோரம் நரைத்த நடுத்தர வயது நபர் ஒருவர் இறங்கி - போர்டிகோ படிகளில் ஏற, ரூபா எழுந்து அவரை நோக்கிப் போனாள்.

"எஸ்... யார் வேணும்...?"

"டாக்டர் மோகன்குமார் வீடு..."

"இதுதான்..."

"என் பேர் மணிவர்மா. ஹோட்டல் ரிட்ஸ் பேலஸில் மானேஜரா இருக்கேன்... டாக்டர் உள்ளே இருக்காரா...?"

"அவர் வெளியே போயிருக்கார்... என்ன விஷயம்...?"

"நீங்க...?"

"அவரோட டாட்டர்..."

"அப்பா வந்தா... அவர்கிட்டே ஒரு விஷயத்தை 'கன்வே' பண்ணிடறீங்களா...?"

"சொல்லுங்க..."



"ஆறு மாசத்துக்கு முன்னாடி... உங்க ஃபாதரும் மதரும்... எங்க ஹோட்டலுக்கு வந்து ரூம் எடுத்து ரெண்டு நாள் தங்கியிருந்தாங்க... அந்த சமயம் உங்க மதரோட வைரத்தோடு ரூம்ல வெச்சு காணாம போனதா ரிசப்ஷன்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணினார். 'உங்க ஹோட்டல் சிப்பந்திகளில் யாராவது ஒருத்தர்தான் அந்த வைரத்தோட்டை எடுத்திருக்கணும்... நான் போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் பண்ண விரும்பலை. நீங்களாகவே கண்டுபிடிச்சு... பொருளைக் கொண்டாந்து குடுங்க!'ன்னு சொல்லிட்டு வந்துட்டார். இன்னிக்குத் தோடு எடுத்தவனைப் பிடிச்சுட்டோம்... தோடு இப்ப ஹோட்டல் ஜெனரல் மானேஜர்கிட்டே இருக்கு... எப்ப வேணும்னாலும் போய் வாங்கிக்கலாம்."

-சொல்லிவிட்டுப் படிஇறங்க முயன்ற அந்த ஆசாமியை, "ஒரு நிமிஷம்..." என்று கூறி நிறுத்தினாள் ரூபா.

"நீங்க எந்த ஹோட்டலுக்கு மானேஜர்னு சொன்னீங்க?"

"ஹோட்டல் ரிட்ஸ் பேலஸ்."

"அது எங்கே இருக்கு...?"

"மஹாபலிபுரத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தள்ளி."

"என்னோட ஃபாதரும் மதரும் எப்ப வந்து தங்கினாங்க...?"

"ஆறு மாசத்துக்கு முன்னாடி..."

"சரி... வீட்டுக்குள்ளே வாங்க..."

"எதுக்கு...?" குரலை இழுத்தார் அவர்.

"வாங்க... சொல்றேன்..."

MithraVintha

அவர் தயங்கிக் கொண்டே உள்ளே வந்தார். போலீஸ் யூனிஃபார்ம்களைப் பார்த்ததும் லேசாய் முகம் மாறினார். ரூபா தன்னுடைய அம்மாவை நெருங்கிக் கேட்டாள்.

"ஏம்மா... ஆறு மாசத்துக்கு முந்தி ஹோட்டல் ரிட்ஸ் பேலஸுக்குப் போய் வைரத்தோட்டைத் தொலைச்சியா...?"

கமலா கண்ணீர்க் கண்களோடு விழித்தாள்.

"இல்லையே..."

"நீயும் அப்பாவும் அந்த ஹோட்டலுக்குப் போய்த் தங்கினதாகவும் - ரூம்ல வெச்ச உன்னோட வைரத்தோடு காணாமல் போனதாகவும் இவர் சொல்றார்... அவர் இந்த ஹோட்டலுக்கு மானேஜர்..."

"இ... இல்லையே..." மறுபடியும் கமலா மறுக்க... ஹோட்டல் மானேஜர் குறுக்கிட்டுச் சொன்னார். "அன்னிக்கு டாக்டரோடு... இவங்க வரலை... வேற யாரோ வந்திருந் தாங்க..."

ரூபா சுவரில் மாட்டியிருந்த - டாக்டர் மோகன் குமாரின் போட்டோவைக் காட்டினாள். "அன்னிக்கு ஹோட்டலுக்கு வந்தது அவர்தானே...?"

அவர் பார்த்துவிட்டுத் தலையாட்டினார்.

"ஆமா..."

இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தான் உட்கார்ந்திருந்த சோபாவை விட்டு எழுந்தார்... "ஹோட்டல் ரிட்ஸ் பேலஸில் நீங்க மானேஜரா இருக்கீங்க இல்லையா...?"

"ஆமா..."



"பேரு...?"

"மணிவர்மா..."

"டாக்டர் மோகன்குமார் அடிக்கடி உங்க ஹோட்டலுக்கு வருவாரா?"

"அடிக்கடி வரமாட்டார். வருஷத்துக்கு ரெண்டு தடவை நிச்சயம் வருவார்."

"எத்தனை வருஷ காலமா அப்படி வர்றார்...?"

"அஞ்சாறு வருஷமா..."

"எப்ப வந்தாலும் அந்தப் பெண்ணோடுதான் வருவாரா...?"

"ஆமா..."

"அந்தப் பெண்ணுக்கு என்ன வயசு இருக்கும்?"

"நாற்பது..."

"அடையாளம் சொல்ல முடியுமா?"

மணிவர்மா யோசித்துவிட்டுச் சொன்னார். "அந்தப் பெண்ணுக்கு கிட்டத்தட்ட நாற்பது வயசு இருக்கும். சிவப்பா, அழகா சினி ஆக்ட்ரஸ் மாதிரி இருப்பாங்க..."

"பேர் என்னன்னு தெரியுமா...?"

"தெரியாது ஸார்... மிஸ்டர் அண்ட் மிஸஸ் மோகன் குமார்னுதான் லெட்ஜர்ல அட்ரஸைப் பதிவு பண்ணியிருக்கோம்... வந்தா ரெண்டு நாள் தங்குவாங்க... அப்புறம் போயிடுவாங்க... அந்தப் பெண்ணு டாக்டரோட ஒய்ஃப்னே இத்தனை நாளும் நினைச்சிட்டிருந்தோம்... இன்னிக்கு இங்கே

MithraVintha

வந்த பின்னாடிதான்... அப்படி இல்லைங்கிற உண்மை தெரியுது..."

"ஆறு மாசத்துக்கு முந்தி வந்து உங்க ஹோட்டல்ல தங்கினப்பதான் அந்தப் பெண்ணோட வைரத்தோடு காணாமப் போச்சா...?"

"ஆமா ஸார்...! வைரத்தோடு காணாமப் போன விபரம் தெரிஞ்சதுமே... நாங்க போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணலாம்னு சொன்னோம்... ஆனா அவர் போலீஸுக்குப் போக விரும்பலை... உங்க ஹோட்டல் சிப்பந்திகளில் யாராவது ஒருத்தர்தான் அந்த வைரத் தோட்டை எடுத்திருக்கணும். கண்டுபிடிக்க... எனக்குத் தகவல் கொடுங்க'ன்னு சொல்லிட்டுப் போயிட்டார்... நாங்களும் இந்த விஷயத்தை போலீஸுக்குக் கொண்டு போகாமே... எங்க ஹோட்டல் நிர்வாக ஆட்களை வெச்ச டீல் பண்ணினோம். தோட்டைத் திருடின ஆளைப் பிடிச்சுட்டோம். அந்த விஷயத்தைச் சொல்லிட்டுப் போறதுக்காகத்தான் வந்தேன். டாக்டர்கிட்டே இந்த விஷயத்தை கன்வே பண்ணிருங்க ஸார்... நான் வர்றேன்..."

மணிவர்மா கிளம்பிப் போனதும் - கார்த்திகேயன் கமலாவிடம் திரும்பினார். "மிஸஸ் கமலா! உங்க கணவர்க்கு இப்படியொரு இல்லீகல் கான்டாக்ட் இருக்கிறது உங்களுக்கு முன்னாடியே தெரியுமா...?"

அதிர்ச்சிக்குள் விழுந்திருந்த - கமலா தலையசைத்தாள்.

"தெரி... தெரியாது..."

"ஹோட்டல் மானேஜர் அடையாளம் சொன்ன பெண்ணை பார்த்து உங்களுக்கு அடையாளம் பிடிபடுதா...?"

"இ... இல்லை."






சிறைக் கதவைத் திறந்துவிட்ட வார்டன், கையிலிருந்த லத்தியால் கம்பிகளைத் தட்டினார்.

"தங்கராஜ்..."

உள்ளே சிமெண்ட் திட்டில் ஒருக்களித்துப் படுத்திருந்த தங்கராஜ் மெல்லப் புரண்டு திரும்பிப் பார்த்தான்.

"ம்..."

"வெளியே வா..."

"எதுக்கு...?"

"ஜெயில் சூப்பிரண்ட் கூட்டிட்டு வரச் சொன்னார்..."

தங்கராஜ், கைகளிலும் - கால்களிலும் பூட்டப்பட்டிருந்த சங்கிலிகள் உராய - மெதுவாய் எழுந்து வெளியே வந்தான். வார்டனைப் பார்த்துப் புன்னகையோடு கேட்டான்.

"என்ன... என்னைத் தூக்குல போடற தேதியைத் தள்ளிப் போட்டுட்டாங்களா...?"

"எனக்குத் தெரியாது..."

"பத்திரிகைக்காரங்க யாராவது வந்திருக்காங்களா?"

"தெரியாது..."

"தெரிஞ்சாலும் சொல்லமாட்டீங்களே...! பெரிய ராணுவ ரகசியம் மாதிரி..."

"தங்கராஜ்! பேசாமே நட..."

Mithra Vintha

"நடந்துக்கிட்டே பேசலாமா...?" குதர்க்கமாய்க் கேட்டு விட்டுச் சிரித்தான் தங்கராஜ். வார்டன் தடியை முதுகில் வைத்துத் தள்ளினார்.

"சீக்கிரமா நட..."

சங்கிலிகள் உராய்ந்து கொள்ள - வேக வேகமாய் நடந்தான் தங்கராஜ். வார்டைக் கடந்ததும் - சூப்பிரண்டின் அறை, திரைச்சீலைகள் அசையும் பெரிய பெரிய ஜன்னல்களோடு வந்தது.

சாத்தியிருந்த கதவை வார்டன் தட்டினார்.

"டொக்... டொக்..."

உள்ளே தலையை நீட்டி, "தங்கராஜ் வந்துட்டான் ஸார்" என்றார்.

"உள்ளே அனுப்பிட்டு, கதவைச் சாத்திக்க...! தங்கராஜ் வெளியே வர்றவரைக்கும் யாரையும் அலவ் பண்ண வேண்டாம்..."

"எஸ்... ஸார்..."

தங்கராஜ் உள்ளே நுழைய - கதவு பின்பக்கமாய்ச் சாத்திக் கொண்டது. ஜெயில் சூப்பிரண்டும் - அஸிஸ்டண்ட் கமிஷனரும் பக்கம் பக்கமாய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியத்தில் புருவங்களை உயர்த்தினான் தங்கராஜ்.

"வணக்கம் ஏசி ஸார்... போலீஸ் லாக்கப்பில் உங்ககிட்டே அடிபட்ட அன்னிக்குப் பார்த்ததுதான்... அதுக்கப்புறம் இப்பத்தான் பார்க்கிறேன்... சௌக்கியம்தானே?"



"தங்கராஜ்! நீ பேப்பர்காரங்களுக்குக் குடுத்த பேட்டியைப் பார்த்தேன்... நீ செஞ்ச கொலைகளுக்கெல்லாம் பின்னாடி... சில பெரிய மனுஷங்க இருக்கிறதாகவும் - அவங்களோட பெயர்களை உரிய நேரத்தில் தெரியப்படுத்தப் போறதாகவும் சொல்லியிருந்தே...!"

"ஆமா...!"

"அந்தப் பெரிய மனுஷங்களோட பேரை எப்ப சொல்லப் போறே?"

"என்னைத் தூக்கில் போடறதுக்கு முதல் நாள் ராத்திரி பூராவும் கண் விழிச்சு உட்கார்ந்து - பத்துப் பக்கத்துக்கு ஒப்புதல் வாக்குமூலம் எழுதிக் கொடுக்கப் போறேன். அந்த வாக்குமூலத்தில் என்னைக் கொலை செய்யத் தூண்டிய - பெரிய மனுஷங்களோட பேரை யெல்லாம் விலாவாரியா சொல்லியிருப்பேன்..."

"அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை இன்னிக்கே எழுதித் தரலாமே!"

"நான் சாகிறதுக்கு முந்தி அதை எழுதிக் குடுக்கத்தான் பிரியப்படறேன் ஏ.சி.ஸார்..."

"இதோ பார் தங்கராஜ்...! உன்னோட இஷ்டப்படியே - ஒப்புதல் வாக்குமூலத்தை நீ என்னிக்கு விரும்பறியோ அன்னிக்கே எழுதிக்குடு... அதுக்கு முந்தி... அந்தப் பெரிய மனுஷங்க யார்ங்கிறதை... எங்கிட்டே சொல்லு..."

"மன்னிக்கணும் ஏ.சி.ஸார்... அந்த வாக்கு மூலத்தைப் பத்திரிகையாளர்களைக் கூட்டி - அவங்க முன்னாடி...

MithraVintha

படிச்சுட்டுதான் உங்க கையில் குடுப்பேன். அதுக்கு முந்தி நான் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்...''

''எப்படியும் உண்மையைச் சொல்லப் போறே...! அதை எப்ப சொன்னாத்தான் என்ன...?''

''நான் தூக்குக்குப் போறதுக்கு முந்தி சொல்லத்தான் பிரியப்படறேன்...! இப்ப உங்ககிட்டே மட்டும் இல்லை... இந்த நாட்டு ஜனாதிபதியே வந்து கேட்டாலும் சரி... சொல்ல மாட்டேன்...''

''டேய்ய்ய்...!'' ஜெயில் சூப்பிரண்ட் ஆத்திரத்தோடு மேஜையின் மேல் இருந்த பிரம்பை எடுத்துக்கொண்டு எழுந்தார். ''இந்த நிமிஷமே உன்னோட வாயிலிருந்து என்னால உண்மையை வரவழைக்க முடியும்.''

தங்கராஜ் சிரித்தான்.

''எங்கே... வரவழைங்க, பார்க்கலாம்.''

சூப்பிரண்ட் பிரம்பை ஓங்க-ஏ.சி. தடுத்தார்.

''வேண்டாம்... அவனை விட்டுடுங்க... அவன் விரும்பற அன்னிக்கே... ஒப்புதல் வாக்குமூலம் தரட்டும்...''

''இவனை இப்படியே விடக் கூடாது ஸார்... தூக்குல தொங்கப்போற நாய்க்கு எவ்வளவு திமிர் பார்த்தீங்களா...!''

''சூப்பிரண்ட் ஸார்... என்னோட திமிரெல்லாம் அடங்கிப் போய் ரொம்ப நாளாச்சு... நீங்க சொல்ற மாதிரி... நிஜமாவே நான் நாய்தான்... பெரிய மனுஷங்க போட்ட பிஸ்கட்டுக்கெல்லாம் ஒரு காலத்துல வாலை ஆட்டிட்டிருந்த நாய்தான். சாகப் போகிற கடைசி நாட்கள்ல நான் திருந்திட்டேன்... இப்ப என்கிட்ட திமிர் இல்லை. பட்டறிவுதான் இருக்கு...''



ஏ.சி. எழுந்தார்.

''இவனை அனுப்பிருங்க...''



6

'தேர்ட் ஐ டிடெக்டிவ் ஏஜென்ஸிக்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு ரூபாவும் பிரதாப்பும் இறங்கினார்கள்.

''ரூபா...''

''ம்...''

''இந்த டிடெக்டிவ் ஏஜென்ஸிகிட்டே பிரச்னையைச் சொன்னா சிரத்தையோடு கண்டுபிடிப்பாங்களா?''

''இன்னிக்கு சிட்டியில பெஸ்ட் இவங்கதான்.''

''ஆபீஸைப் பார்த்தா சுமாரா இருக்கு...''

மாடிப்படிகளில் உயர்ந்து - ஏஜென்சி அறைக்குள் நுழைய, டைப்ரைட்டிங் மெஷினைத் தட்டிக் கொண்டிருந்த கவிதா நிமிர்ந்தாள்.

''எஸ்...''

''மிஸ்டர் சுரேனைப் பார்க்கணும்.''

''நீங்க...?''

''என் பேர் ரூபா. ஹி...ஈஸ்... மை ஹஸ்பண்ட்.''

''ஆல்ரெடி அப்பாய்ன்மெண்ட் வாங்கியிருக்கீங்களா?''

''இல்லை...''

Mithra Vintha

கவிதா ரிஸீவரை எடுத்து... இண்டர்காமில் பட்டனைத் தட்டிவிட்டு... உள்ளே யிருந்த சுரேனோடு பேசிவிட்டு - ரூபாவை ஏறிட்டாள்.

"நீங்க அவரைப் போய்ப் பார்க்கலாம்... அந்த கேபின்தான்."

ரூபாவும் பிரதாப்பும் அவள் சுட்டிக் காட்டிய கேபினுள் நுழைந்தார்கள்.

"வணக்கம்..."

"வணக்கம்... உட்கார்ங்க..." சுரேன் எதிரே இருந்த குஷன் நாற்காலிகளைக் காட்டிவிட்டு... கையில் வைத்திருந்த பேப்பர் வெயிட்டை உருட்டினான்.

ரூபா உட்கார்ந்து கொண்டே சொன்னாள்.

"ஒரு ப்ராப்ளம்."

"சொல்லுங்க..."

"நேத்து பேப்பர் ந்யூஸ்ல... 'டாக்டர் மோகன் குமார் கடத்தல்'ங்கிற செய்தியைப் படிச்சிருப்பீங்க...!"

"ஆமா..."

"டாக்டர் மோகன்குமார் என்னோட ஃபாதர்..."

"மை குட்னஸ்..."

"அப்பா கடத்தப்பட்டதுல எனக்கு நிறையச் சந்தேகங்கள் இருக்கு. அவர் 'தீப்பொறிகள்' என்கிற இயக்கத்தால் கடத்தப்பட்டிருக்கலாம்னு போலீஸ் சொல்றதை என்னால நம்ப முடியலை..."



"சரி, உங்க அஸ்ஸெம்ஷன் என்ன?"

"அவர்க்கு வேண்டாதவர்களாலே கடத்தப்பட்டிருக்கார்."

"வேண்டாதவர்கள்னா யாரு...?"

"அதை நீங்கதான் கண்டுபிடிக்கணும்..."

பிரதாப் குறுக்கிட்டான். "இதுல இன்னொரு விஷயமும் இன்வால்வ் ஆகியிருக்கு... ரூபாவோட ஃபாதர்க்கும் வேற ஒரு பெண்ணுக்கும் இல்லீகல் டச் இருந்திருக்கு... ஹோட்டல் ரிட்ஸ் பேலஸில்..." என்று ஆரம்பித்து - வைரத்தோடு திருட்டுப் போன சங்கதியையும் சொன்னான் பிரதாப்.

சுரேன் மையமாய்த் தலையாட்டிக்கொண்டே கேட்டான்.

"இந்த 'இல்லீகல் டச்' ந்யூஸ் பேப்பர்ல வரலை இல்லையா?"

"ஆமா..."

"டாக்டர் மோகன்குமார் தொடர்பு வெச்சிருந்த பெண் யார்ங்கிறதை போலீஸ் கண்டுபிடிச்சுட்டாங்களா?"

"இல்லை..."

"சரி... நான் இந்த கேஸ்ல என்ன பண்ணணும்?"

"கடத்தப்பட்ட எங்கப்பாவைக் கண்டுபிடிக்கணும்... போலீஸ் இந்த விஷயத்தில் இப்பவே மெத்தனம் காட்ட ஆரம்பிச்சுட்டாங்க... ரெண்டு நாளா அவரைக் கண்டுபிடிக்க ஒரு ஸ்டெப்பும் எடுக்கலை... வீட்டுக்கு வர்றதும்... வெறுமனே விசாரணை பண்ணிட்டுப் போறதுமா இருக்காங்க... ஊர்ல எங்கேயாவது டெட்பாடி கிடந்தா... கூட்டிட்டுப் போய்... அடையாளம் தெரியாத அந்தப் பிணத்தைக் காட்டி, 'அது

Mithra Vintha

உங்கப்பாவா பாரு?' ன்னு சொல்றாங்க... அவங்க எடுக்கிற நடவடிக்கையெல்லாம் பாசாங்குத்தனமா இருக்கு..."

"அப்படிச் சொல்லாதீங்க... போலீஸோட கண்ணோட்டம் எப்பவும் பல திசையில் பாயும்... அதிலும் இந்த கேஸை டீல் பண்ற இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் டேலன்டட் போலீஸ் ஆபீஸர்..."

"ஐயாம் நாட் சாட்டிஸ்ஃபைடு வித் தேர் ஆக்டிவிடீஸ்."

"சரி... உங்க ஃபாதரைப் பத்தி நான் கேட்கிற சில கேள்விகளுக்கு உங்ககிட்டயிருந்து எனக்கு உண்மையான பதில்கள் வேணும்."

"எனக்குப் பொய் சொல்லத் தெரியாது..."

"தட்ஸ் குட்..." சிரித்த சுரேன் மெல்லிய குரலில் கேட்டான். "உங்க ஃபாதர்க்கும் மதர்க்கும் இடையில் சுமுகமான உறவு இருந்ததா?"

"ரெண்டு பேருமே ஐடியல் கப்புள். ஒரு நாள் கூட சண்டை போட்டுக் கொண்டதில்லை..."

"ஃபாதர்க்கு என்ன வயசு...?"

"நாற்பத்தி ஏழு..."

"ஒரு பெண்ணோடு அவர் தப்பான தொடர்பு வெச்சிருந்தார்ங்கிற நியூஸை நீங்க நம்பறீங்களா...?"

"நம்பற மாதிரிதானே சம்பவம் நடந்திருக்கு...!"

"அவர்க்கு நெருங்கின ஃப்ரண்ட் யாரு...?"



"அப்படீன்னு யாரும் கிடையாது... ஈவினிங் க்ளினிக்கிலிருந்து திரும்பியதும் டாக்டர்ஸ் க்ளப்புக்குப் போவார், அவ்வளவுதான்."

"தினமும் போவாரா...?"

"ஆமா..."

"அங்கே போய் என்ன பண்ணுவார்...?"

"பில்லியர்ட்ஸ் விளையாடுவார்..."

"க்ளப்பிலிருந்து எத்தனை மணிக்குத் திரும்புவார்...?"

"ராத்திரி எட்டு மணிக்கு மேல்..."

"டாக்டரோட போட்டோ உங்ககிட்டே இருக்கா...?"

"இருக்கு..."

"குடுத்துட்டுப் போங்க... அப்படியே உங்க வீட்டு அட்ரஸ், டெலிபோன் நெம்பரை இந்த டயரியில் நோட் பண்ணிடுங்க..."

ரூபா, சுரேன் நீட்டிய டயரியை வாங்கி - வீட்டு அட்ரஸையும் டெலிபோன் எண்ணையும் குறித்துக் கொண்டிருக்கும்போதே - மேஜையின் மேலிருந்த டெலிபோன் சிணுங்கியது.

சுரேன் ரிஸீவரை எடுத்தான்.

கவிதா பேசினாள்.

"பாஸ்! உங்களுக்கு போன்..."

"போன்ல யாரு...?"

"தெரியலை..."

MithraVintha

"ஆனா... பெண்ணா...?"

"ஆன். விஷயம் என்னான்னு கேட்டா... உங்ககிட்டதான் பேசணுமாம்.. பேசறீங்களா...?"

"ம்.. லைன் குடு..."

கொடுத்தாள்.

"ஹலோ..."

"யாரு.. சுரேனா...?" ஒரு ஆண் குரல் கேட்டது.

"ஆமா...! நீங்க...?"

"தீப்பொறிகள்" இயக்க மெம்பர்."

"சரி... என்ன விஷயம்...?"

"டாக்டர் மோகன்குமாரை எங்க இயக்கத்துக்குத் தேவைப்பட்டதால நாங்க தத்து எடுத்துக்கிட்டோம். அதாவது அவரை 'ஆயுள் அரெஸ்ட்' பண்ணிட்டோம். அவரை மீட்கிறதுக்காக ரூபாவும் அவளுடைய புருஷனும் உன்கிட்டே யோசனை கேட்டு வந்திருக்காங்கன்னு நினைக்கிறேன்... அவங்களுக்கு நீ உதவி பண்ற முயற்சியில் ஈடுபடக் கூடாது... அப்படிப்பட்ட முயற்சியில் நீ ஈடுபட்டா... உன்னோட 'ஆயுளை' அரெஸ்ட் பண்ண வேண்டியிருக்கும்..."

"தேங்க்ஸ்..."

"என்னடா தேங்க்ஸ்...? சொன்னது உறைக்கலை...?"

"காரம் போதாது..."

"டேய்ய்..."



"சத்தம் போடாம ரிஸீவரை வெச்சுட்டு... பூத்தை விட்டு வெளியே போயிரு... பப்ளிக் டெலிபோன் பூத்துக்குள்ளே இவ்வளவு நேரம் பேசிட்டிருக்கக்கூடாது..." சொல்லிவிட்டு ரிஸீவரைச் சாத்தினான் சுரேன்.

பிரதாப் கேட்டான்.

"டெலிபோன்ல யாரு...?"

"ஒரு வேண்டாத விருந்தாளி..."

ரூபா, டாக்டர் மோகன்குமாரின் போட்டோவையும் - தன் வீட்டு அட்ரஸ், டெலிபோன் நெம்பரையும் சுரேனின் டயரியில் எழுதிக் கொடுத்தாள். பிரதாப் குறுக்கிட்டு, "ஒரு சின்ன ரெக்வெஸ்ட்!" என்றான்.

"என்ன...?"

"ரூபாவோட அப்பாவைக் கண்டுபிடிக்க நீங்க எடுத்துக்கிற முயற்சிகள் எதுவும் போலீஸுக்குத் தெரிய வேண்டாம்..."

"சரி..."

"உங்க ஃபீஸ்..."

"டாக்டர் மோகன்குமாரை உங்க முன்னாடி கொண்டு வந்து நிறுத்திட்டு என்னோட ஃபீஸை சொல்றேன்... சில தகவல்களுக்காக - உங்க வீட்டுக்கும் - டாக்டரோட வீட்டுக்கும் அடிக்கடி வர வேண்டியிருக்கும்... ஒத்துழைக்கணும்..."

"ஷ்யூர்... ஷ்யூர்..."

MithraVintha

7

அஸிஸ்டண்ட் கமிஷனர் - கமிஷனர்க்கு முன்பாய் சல்யூட் அடித்துவிட்டு நின்றார்.

"என்னாச்சு... மிஸ்டர் நம்பியார்?"

"தங்கராஜ் மசியலை ஸார்... தூக்குல தொங்கற துக்கு முதல் நாள் ராத்திரிதான்... அந்த வி.ஐ.பி.க் களோட பேரையெல்லாம் சொல்லுவானாம்."

"நைச்சியமா பேசிப் பார்க்கிறதுதானே...?"

"அந்தக் கட்டத்தையெல்லாம் அவன் தாண்டிட்டான் ஸார். கெஞ்சிப் பேசினாலும் சிரிக்கிறான். அதட்டினாலும் சிரிக்கிறான்."

"தங்கராஜ் தரப்போகிற வாக்குமூலம் எந்த மாதிரியானது... அதுல யார் யாரை அவன் மென்ஷன் பண்ணப் போறாங்கிற விபரம் பத்திரிகைக்காரங்களுக்குத் தெரியறதுக்கு முன்னாடி... நமக்குத் தெரிஞ்சாகணும்..."

"ஸ...ஸார்..."

"சொல்லுங்க..."

"ஆளை ரெட் ரூமுக்குக் கொண்டு போய் - கட்டித் தொங்கவிட்டா... ஒரு வேளை உண்மை வெளியே வரலாம்..."

"டாக்டரோட ரிப்போர்ட்படி தங்கராஜ்க்கு ஹார்ட் ரொம்ப வீக். அடிக்கிற அடியில் - அவன் உயிரை விட்டுட்டான்னா... கொலைகளுக்குப் பின்னாடி இருக்கிற அந்த 'பிக்-ஷாட்ஸ்' யாருங்கிறது தெரியாமலே போயிடும்... அவனை ஃபோர்ஸ் பண்றதுல எந்த பிரயோஜனமும் இல்லை... அவனைத் தூக்குல போடற தேதி என்னிக்கு...?"



"வர்ற இருபத்தியோராம் தேதி..."

"அப்படீன்னா இருபதாம்தேதி ராத்திரிதான் தங்கராஜோட வாக்குமூலம் நமக்குக் கிடைக்கும்..."

"ஆமா ஸார்..."

"மிஸ்டர் நம்பியார்! நீங்க ஒரு காரியம் பண்ணணும்."

"சொல்லுங்க ஸார்..."

"தங்கராஜ் வாக்குமூலம் தர்ற அந்த இருபதாம் தேதி எந்தப் பத்திரிகை ரிப்போர்ட்டரும் ஜெயிலுக்கு வரக்கூடாது..."

"அதெப்படி ஸார் முடியும்...? பத்திரிகை நிருபர்கள் வந்தால்தானே தங்கராஜ் தான் எழுதி வெச்சிருக்கிற வாக்குமூலத்தைப் படிக்கக் குடுப்பான்."

"அது எனக்கும் தெரியும்... பட்... பத்திரிகை நிருபர்கள் யாரும் வரப்போறதில்லை. அவங்களுக்குப் பதிலா... நம்ம டிபார்ட்மெண்ட் ஆட்களே பத்திரிகை நிருபர்களா மாறி... பேப்பரும் பேனாவுமா போய் உட்கார்ந்துக்க வேண்டியது தான்"

"ஸார்... தங்கராஜ் சந்தேகப்பட்டுட்டா...?"

"அவன் சந்தேகப்படாத மாதிரி காரியத்தைப் பண்ணணும். நம்ம டிபார்ட்மெண்ட்ல போலீஸ் மேனா இருக்கிற ஆட்கள் வேண்டாம். க்ளெரிகல் செக்ஷனிலிருந்து ஆட்களை செலக்ட் பண்ணுங்க... பாதிப் பேர் பெண்களா இருக்கட்டும்... ஊர்ல என்னென்ன பத்திரிகை இருக்கோ... அத்தனை பத்திரிகை களோட பெயரையும் 'பாட்ஜ்' பண்ணி - ஆளுக்கு ஒண்ணை மாட்டிருங்க..."

MithraVintha

"எஸ்... ஸார்..."

"இருபதாம் தேதி வரை விஷயம் நமக்குள்ளயே இருக்கட்டும்."

"எஸ்... ஸார்..."

"தேன்...! டாக்டர் மோகன்குமார் கடத்தப்பட்டது சம்பந்தமா... டிட்... யூ... கெட் எனி யூஸ்ஃபுல் நியூஸ்...?"

"நோ ஸார். இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தீவிரமா கேஸை இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்கார்..."

"டாக்டர் மோகன்குமார் ஒரு பெண்ணோடு - ஆறு மாசத்துக்கு முன்னாடி ரிட்ஸ் பேலஸ் ஹோட்டலுக்குப் போய்த் தங்கியது சம்பந்தமா - அந்த ஹோட்டலுக்குப் போய் என்கொய்ரி பண்ணீங்களா...?"

"கார்த்திகேயன் என்கொயர் பண்ணினார்."

"ரிப்போர்ட் என்ன...?"

"பெண்ணோட பேர் தெரியலை... பட் ஒரு அவுட்லைன் கிடைச்சிருக்கு... ஷி வாஸ் ஏ ப்யூட்டிஃபுல் உமன்..."

"டாக்டர் மோகன்குமார்க்கு இப்படியொரு இல்லீகல் கான்டாக்ட் இருக்கிறது அவரோட ஒய்ப்புக்குத் தெரியாமலா இருந்திருக்கும்...?"

"தெரியலைன்னு சொல்றாங்க ஸார்..."

"அந்தப் பெண்ணு யார்ங்கிறதைக் கண்டுபிடிச்சாத்தான்... டாக்டர் கடத்தப்பட்டதுக்கான காரணம் கிடைக்கும்..."



"எஸ்... ஸார்..."

"கேஸை க்ளோஸ் ஃபாலோ அப் பண்ணச் சொல்லி இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் குடுங்க..."

"எஸ்...ஸார்..."

"தங்கராஜ் விஷயமா நாம மறுபடியும் ரெண்டு நாள் கழிச்சுப் பேசறோம்..."

தலையாட்டிய அஸிஸ்டண்ட் கமிஷனர் நம்பியார், ஒரு சல்யூட்டை அடித்துக் கொண்டே பின்வாங்கி நகர்ந்தார்.




யமஹாவை விரட்டிக் கொண்டிருந்தான் சுரேன். பில்லியனில் கவிதா சுயிங்கம் மென்றபடி கேட்டாள். நேரம் காலை எட்டு மணி.

"இப்பவாவது சொல்லுங்க பாஸ்.. நாம எங்கே போயிட்டிருக்கோம்...?"

"சோலை அபார்ட்மெண்ட்ஸ் தெரியுமா உனக்கு?"

"தெரியும்..."

"எங்கே யிருக்குன்னு சொல்லு. பார்க்கலாம்."

"ஸ்பென்ஸர் காலனிக்குள்ளே..."

"பரவாயில்லையே... நல்லா ஊர் சுத்தியிருக்கே..."

கவிதா, சுரேனின் முதுகில் குத்திவிட்டுக் கேட்டாள், "சரி! சோலை அபார்ட்மெண்ட்ல யாரைப் பார்க்கப் போறோம்...?"

MithraVintha

"மிஸ் கோமளா..."

"யாரது...?"

"டாக்டர்ஸ் கிளப் டெலிபோன் ஆபரேட்டர்..."

"டாக்டர் மோகன்குமார் தினமும் சாயந்தரம் ஆறுமணிக்கு மேல் பில்லியர்ட்ஸ் ஆடப் போவாரே. அந்த டாக்டர்ஸ் கிளப்பா...?"

"அதேதான்..."

"டாக்டரைப் பத்தி... அந்தக் கோமளாகிட்டே கிளறப் போறீங்க!"

"கரெக்ட்..."

"அவ அட்ரஸ் எப்படி உங்களுக்கு...?"

"கிடைச்சதுன்னு கேக்கறியா...?"

"ஆமா..."

"நம்ம இந்தியாவோட தேசியத் தொழிலைப் பண்ணினேன்."

"தேசியத் தொழிலா...?"

"ம்... டாக்டர்ஸ் க்ளப் வாட்ச்மேனுக்கு அம்பது ரூபா நோட்டு ஒண்ணைக் கொடுத்தேன்... டெலிபோன் ஆபரேட்டரோட ஜாதகமே கைக்கு வந்துருச்சு...! கோமளா இன்னமும் கல்யாணம் பண்ணிக்காத முதிர்கன்னி. சோலை அபார்ட்மெண்ட்ல தனியா ஒரு ப்ளாட் எடுத்துத் தங்கியிருக்கா..."



"கோமளாகிட்டே என்ன தகவல் கிடைக்கும்னு நினைக்கறீங்க பாஸ்..."

"கோமளா ஒரு பெண். அதிலும் டெலிபோன் ஆபரேட்டர். அந்த டாக்டர்ஸ் கிளப் கட்டடத்துக்குள்ளேயே கோமளாவைத் தவிர, மத்த ஸ்டாஃப் எல்லாருமே ஜெண்ட்ஸ்... பத்து வருஷ எக்ஸ்பீரியன்ஸ் உள்ள கோமளாவுக்கு - அங்கே வர்ற அத்தனை டாக்டர்ஸோட விவகாரங்களும் தெரிஞ்சிருக்கலாம்..."

"கோமளா சொல்லுவான்னு நினைக்கறீங்களா...?"

"சொல்ல வைக்கணும்..."

"எப்படி...?"

"பேசாமே என்கூட வந்து வேடிக்கை பாரு..." யமஹா பத்து நிமிஷம் பயணித்து - ஸ்பென்ஸர் காலனிக்குள் நுழைந்து சோலை அபார்ட்மெண்ட்டை மோப்பம் பிடித்துக் கொண்டு நின்றது.

அபார்ட்மெண்ட் மொத்த ஏழு மாடிகளோடு இருந்தது. காலை நேரச் சந்தடி எல்லா ப்ளாட்களிலும் இருந்தது.

"ஏய்... ஜானு எருமை மாடே...! ஸ்கூல் பேக்கை எங்கே போட்டு வெச்சிருக்கே பாரு..."

"அது என்னோடது இல்லேம்மா... ப்ரியாவோடது..."

"சரி...சரி... எடுத்து வெய்யி...!"

"என்ன ராவ்... ஆபீஸ் கிளம்பிட்டீங்களா...?"

"ஆமா... இன்னிக்கு ஹெட் ஆபீஸிலிருந்து இன்ஸ்பெக்ஷனுக்கு வர்றாங்க... சீக்கிரமே போய்க் குப்பையைக் கொட்டணும்..."

MithraVintha

"நம்ம அபார்ட்மெண்ட் அஸோசியேஷன் மீட்டிங்கை எப்ப வெச்சக்கலாம்...?"

"முரளியைத்தான் கேட்கணும்..."

"வர்ற சண்டே வெச்சக்கிட்டா பரவாயில்லை..."

சுரேஷும் கவிதாவும் நடந்தார்கள். "எந்த ப்ளோர்...?"

"ஃபிப்த்..."

லிஃப்ட்டில் ஏறி ஐந்தாவது மாடிக்கு வந்தார்கள்.

"ப்ளாட் நெம்பர்...?"

"பதினாறு..."

குழந்தைகளின் கூச்சலும், டி.வி.யின் அலறல் சத்தமும் - எல்லா ப்ளாட்டுகளிலிருந்தும் சதம்பமாய்க் கேட்டுக் கொண்டிருக்க, 16 எண்ணிட்ட ப்ளாட்டின் கதவுக்கு முன்பாய் வந்து நின்றார்கள். கதவின் நெற்றியில் 'மிஸ் கோமளா'வை ஆங்கில பிளாஸ்டிக் எழுத்துக்கள் உச்சரித்தன. சுரேன் அழைப்பு மணியின் பொத்தானை அமுத்தினான்.

உள்ளே ம்யூஸிகல் காலிங்பெல் சத்தம்- பியானோவாய் எழுந்தது. சில விநாடி காத்திருப்புக்குப் பின்-

கதவு மெதுவாய்த் திறந்தது.

கதவுக்குப் பின்னால் - அந்த நடுத்தர வயதுப் பெண் நின்றிருந்தாள். முப்பது வயது இருக்கலாம். மாநிறம். அந்நேரத்துக்கே குளித்திருந்தாள். கூந்தல் ஈரத்தை உறிஞ்சுவதற்காக - தலைக்கு டவலைச் சுற்றியிருந்தாள்.

"எஸ்..."



"மிஸ் கோமளா..."

"நான்தான்..."

"உங்ககூட கொஞ்சம் பேசணும்."

"நீங்க யாரு...?"

"டெல்லி சி.பி.ஐ. சென்டர் - ஸ்டேட் விங் பெடரேஷனிலிருந்து வர்றோம்..." சுரேன் சொன்னதைக் கேட்டு கவிதா கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டாள். கோமளா திகைத்தாள். கண்களில் சின்னச் சின்னதாய்த் திகில் திரைகள்.

"ஃபார் வாட் பர்ப்பஸ்...?"

பேச முயன்றவளைக் குறுக்கிட்டான்.

"உள்ளே போய்விடலாமே..."

"ஸாரி...! ப்ளீஸ் கம்..."

கோமளா உள்ளே கூட்டிப் போய்- நாற்காலிகளைக் காட்டினாள். சுரேன் உட்கார்ந்து கொண்டே கேட்டான்.

"டாக்டர்ஸ் கிளப்பில் நீங்க டெலிபோன் ஆபரேட்டரா இருக்கீங்க, இல்லையா...?"

"ஆ... ஆமா..."

"டாக்டர் மோகன்குமார் கடத்தப்பட்டதைப் பத்தி என்ன நினைக்கறீங்க?"

"நோ... ஐடியா..."

MithraVintha

"டாக்டர் தினமும் ஆறு மணிக்கு மேல் - சாயந்தரம் பில்லியர்ட்ஸ் விளையாட கிளப்புக்கு வருவார்னு கேள்விப் பட்டோம்..."

"ஆமா..."

"டாக்டர் உங்ககிட்டே பேசுவாரா...?"

"ம்... பேசுவார்..."

"அவர் கிளப்பில் இருக்கும்போது - வெளியே இருந்து அவர்க்கு போன்கால் வருமா...?"

"வர்றதுண்டு..."

"யார் போன் பண்ணுவாங்க...?"

"டோண்ட் நோ... வெளியிலிருந்து போன் வந்ததுமே நான் பில்லியர்ட்ஸ் கோர்ட் இருக்கிற செக்ஷனுக்கு - இண்டர்காம் மூலமா தகவல் குடுத்துருவேன். அதோடு என் வேலை முடிஞ்சது..."

"க்ளப்பிலிருந்து டாக்டர் வெளியே யார்க்காவது போன் பண்ணுவாரா...?"

"பண்ணுவார்..."

"யார்க்கு...?"

"எனக்குத் தெரியாது"

"எந்த நம்பர்க்கு அடிக்கடி போன் பண்ணுவார்...?"

கோமளா மௌனித்தாள்.

சுரேன் தொடர்ந்தான். "இதோ பாருங்க, மிஸ் கோமளா...! உங்களுக்குத் தெரிஞ்ச உண்மைகளைத் தயவு பண்ணி



மறைக்காதீங்க... அந்த டாக்டர்ஸ் கிளப்பில் பத்து வருஷமா இருக்கீங்க... அங்கே வர்ற டாக்டர்ஸைப் பத்தி உங்களுக்கு ஓரளவுக்காவது தெரிஞ்சிருக்கணும்... டாக்டர் மோகன் குமாரைப் பத்தி - உங்களுக்கு என்ன தெரியுமோ, அதைச் சொல்லுங்க..."

"அவரைப்பத்தி எனக்கு டீடெய்லா எதுவும் தெரியாது... ஆனா அவர் கிளப்புக்கு வந்த கொஞ்ச நேரத்துக்குள்ளே... ஒரு நம்பர்க்கு கனெக்ஷன் கேட்டு சுமார் பத்து நிமிஷ நேரம் பேசுவார்..."

"அவர் யாரோடு பேசறார்ங்கிறதை ஹியர் பண்ணியிருக் கீங்களா...?"

"இல்லை..."

"அவரோடு பேசறது ஆணா... பெண்ணா...?"

"பெண்"

"டெலிபோன் நெம்பர்...?"

"262741."

கவிதா குறித்துக் கொண்டாள்.

"லோக்கல் போலீஸ் உங்ககிட்டே விசாரணைக்கு வந்தாங்களா?"

"கிளப்புக்கு வந்தாங்க... க்ளப் பிரஸிடெண்ட்கிட்டேயும் செக்ரட்ரிகிட்டேயும் விசாரணை பண்ணிட்டுப் போயிட்டாங்க... என்கிட்டே வரலை..."

"தாங்க்யூ மிஸ் கோமளா... இப்ப நீங்க எங்ககிட்டே சொன்னதை வெளியே லீக் பண்ண வேண்டாம். இதை

MithraVintha

நான்ஃபிடென்ஷியலா ட்ரீட் பண்ணனும். டோன்ட் மேக் எனி ஓல் டாக்..."

கோமளா அப்பாவித்தனமாய்த் தலையாட்ட- சுரேனும் கவிதாவும் எழுந்து- புறப்பட ஆரம்பித்தார்கள்.

"எக்ஸ்யூஸ் மீ..."

"எஸ்..."

"கேன் யூ ஷோ மீ யுவர் ஐடென்டிஃபிகேஷன் கார்ட்ஸ்?"

"ஷ்யூர்..."

சொன்ன சுரேன்...

சட்டை மேல் பாக்கெட்டில் வைத்திருந்த - நேற்று இரவு தானே தயாரித்த அந்த போகஸ் சி.பி.ஐ. ஐடென்டிஃபிகேஷன் கார்டுகளை எடுத்துக் கோமளாவின் முகத்திற்கு நேரே நீட்டினான்.




ஜெயில் சூப்பிரண்ட் அறைக்குள் நுழைந்தார் அந்த வார்டன். உடம்பில் பதட்டம்.

"ஸார்....."

"என்ன ஜெபமணி...?"

"தங்கராஜ்க்கு உடம்பு சரியில்லை ஸார்... சாப்பிட்டதை யெல்லாம் வாமிட் பண்ணிட்டிருக்கான்..."

"டாக்டர்க்கு இன்ஃபார்ம் பண்ணிட்டீங்களா...?"

"பண்ணியிருக்கு ஸார்..."



"ராத்திரி என்னத்தைச் சாப்பிட்டான்...?"

"ஒண்ணும் சாப்பிடலை ஸார்... வழக்கமா சாப்பிடற சாப்பாட்டைக் கூட வேண்டாம்னு சொல்லிட்டான்..."

சூப்பிரண்ட் எழுந்தார். "செத்துக் கித்துப் போகப் போறான்... இருபதாம் தேதி ராத்திரி அவன் தரப்போற வாக்கு மூலத்துக்காக - போலீஸ் டிபார்ட்மெண்டே கண் கொத்திப் பாம்பாட்டம் பார்த்திட்டிருக்கு..."

வார்டனோடு நடந்து - வார்டுக்கு வந்தார் சூப்பிரண்டு. சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் - தங்கராஜ் வெறும் தரையில் உடம்பைக் குறுக்கிக் கொண்டுபடுத்திருந்தான். சூப்பிரண்ட் கூப்பிட்டார்.

"தங்கராஜ்..."

அவன் அசைவில்லாமல் அப்படியே படுத்திருந்தான்.

வார்டன் கையிலிருந்த லாட்டியால் கம்பிகளைத் தட்டினார்.

"தங்கராஜ்...! எந்திரிச்சு... இப்படி வா..."

தங்கராஜ் திரும்பவில்லை.

சூப்பிரண்ட் வார்டனை ஏறிட்டார்.

"கதவைத் திற மேன்..."

கதவு திறக்கப்பட்டதும்-

உள்ளே போன சூப்பிரண்ட் திடுக்கிட்டார்.

தங்கராஜ் கண்கள் செருகி - லேசாய் வாய் பிளந்து தெரிந்தான்.

MithraVintha

"தங்கராஜ்..."

குனிந்து அவனை உசுப்பினார்.

"ம்... ம்..."

முனகல் சத்தம் மட்டும் அவனிடமிருந்து கேட்டது.

"உனக்கு என்ன பண்ணுது...?"

"அ... அ... அய்யா... டாக்... டரைக் கூ... கூப்பிடுங்க... நா... நான் செத்துப் போயிடக் கூடாது... எ... என்னைக் கா... காப்பாத்துங்க..."

சூப்பிரண்ட் வார்டனிடம் கத்தினார்.

"போய்... டாக்டரைச் சீக்கிரமா வரச் சொல்லு... மேன்..."

வார்டன் ஓடினார்.

## 10

டெலிபோன் எக்சேஞ்ச் அலுவலகம்.

சுரேனும் கவிதாவும் உள்ளே நுழைந்து-வரவேற்பு கௌண்ட்டரில் இருந்த பெண்ணை நெருங்கினார்கள்.

"மிஸ்டர் செல்வத்தைப் பார்க்கணும்..."

"டெஸிக்னேஷன்..."

"அஸிஸ்டண்ட் ஈ ஈ..."

"ஒரு நிமிஷம் உட்கார்ங்க. அவரைக் கூப்பிட்டு விடறேன்..." இண்டர்காம் ரிஸீவரை அவள் கையில் எடுத்துக் கொள்ள - சுரேனும் கவிதாவும் -வரவேற்பு சோபாவுக்கு வந்து சாய்ந்தார்கள். காத்திருந்தார்கள்.



அடுத்த ஐந்தாவது நிமிஷம் செல்வம் வந்தான். லீக்கோ கரிநிறம். பெரிய சைஸ் தொப்பை. கண்களில் பவர்ஃபுல் ஸ்பெக்ஸ்.

"வாடா... துப்பறியும் புலி... எந்த நம்பர்க்காவது அட்ரஸ் வேணுமா...?"

"ஆமா..."

"இல்லேன்னா நீ எதுக்குடா என்னைத் தேடிக்கிட்டு வர்றே...! ம்... நம்பரைச் சொல்லு..."

"262741."

"உடனே பர்ட்டிகுலர்ஸ் வேணுமா...?"

"ஆமா..."

"உட்கார்ந்திட்டிரு. வந்துடறேன்..."

எழுந்து போனவன் - பத்து நிமிஷம் கழித்து - ஒரு சிறிய பேப்பரைக் கொண்டு வந்து கொடுத்தான். "நீ குடுத்த நெம்பர்க்குரிய அட்ரஸ் இதுதான்."

சுரேன் வாங்கிப் பார்த்தான்.

'அருணா வொர்க்கிங் உமன் ஹாஸ்டல், நெம்பர் 72, பாரதி லே - அவுட் சென்னை - 600 020.'

"தேங்க் யூ... நான் வரட்டுமா செல்வம்...?"

"பார்த்தியா... காரியம் முடிஞ்சதும் உடனே புறப்பட்டுட்டே..."

"அவசரம் செல்வம். ரெண்டு நாள் கழிச்சு... நானே உன் வீட்டுக்கு வர்றேன்."

MithraVintha

"கண்டிப்பா வருவியா...?"

"வர்றேன்..."

சுரேன், கவிதாவோடு, வெளியே வந்தான். பைக்கில் தொற்றினார்கள். நடு மண்டையில் வெயில் உறைக்க - உடம்பு முழுக்க வியர்த்துக் கொட்டியது.

"பாஸ்..."

"ம்..."

"அருணா வொர்க்கிங் உமன் ஹாஸ்டல்ல எப்படியும் நூறு பேராவது தங்கியிருப்பாங்க... அதுல டாக்டர் மோகன் குமாரோடு பேசினது யார்னு எப்படி கண்டுபிடிக்கப் போறோம்?"

"ஹாஸ்டலுக்கு இன்சார்ஜா யார் இருக்காங்களோ... அவங்ககிட்டே விபரத்தைச் சொல்லி விசாரிக்க வேண்டியது தான்..."

பைக் அடையாறு பகுதியில் நுழைந்து - பாரதி லே அவுட்டைக் கண்டுபிடித்து - அருணா வொர்க்கிங் உமன் ஹாஸ்டலுக்கு முன்பாய் நின்றது. பழங்காலக் கட்டடத்தைப் புதிய மோஸ்தர்க்குக் கொண்டு வந்து- டிஸ்டெம்பர் பூச்சைக் கொடுத்திருந்தார்கள்.

சுரேனும், கவிதாவும் பைக்கை நிறுத்திவிட்டு, உள்ளே போனார்கள். க்ரோட்டன்ஸ் செடித் தொட்டிகள் அணி வகுத்திருந்த கான்க்ரீட் பாதையைக் கடந்ததும் - 'ஆபீஸ்' என்று எழுதப்பட்ட அறை தெரிய- முன்னுச்சியிலும் காதோரத்திலும் நரைத்த ஒரு பெண் இவர்களின் வரவால் கலைந்து நிமிர்ந்தாள்.



மேஜையின் மேல் 'ஹாஸ்டல் இன் - சார்ஜ்' பெயர்ப்பலகை தெரிந்தது. இருவரும் அவளை நெருங்கினார்கள்.

"எஸ்..."

"நாங்க போலீஸ் க்ரைம் ப்ராஞ்ச்..."

அந்தப் பெண் பதட்டமடைந்தாள். "பீ... ஸீட்டெட்!" நாற்காலிகளைக் காட்டிவிட்டுக் கேட்டாள்.

"என்ன விஷயமா வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்க லாமா...?"

சுரேன் மேஜையின் மேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு மெல்லிய குரலில் பேச்சை ஆரம்பித்தான்.

"டாக்டர் மோகன்குமார் கடத்தப்பட்ட நியூஸைப் பேப்பர்ல படிச்சீங்களா?"

"ஆமா..."

"உங்க டெலிபோன் நெம்பர் என்ன?"

"262741."

"உங்க ஹாஸ்டல்ல மொத்தம் எத்தனை பெண்கள் தங்கியிருக்காங்க?"

"எழுபத்தேழு பேர்..."

"அந்த எழுபத்தேழு பேர்ல யாரோ ஒரு பெண் அடிக்கடி டாக்டர் மோகன்குமாரோடு டெலிபோனில் பேசியிருக்கா... அந்தப் பெண் யார்ங்கிற விபரம் எங்களுக்கு வேணும். உங்களாலே ஹெல்ப் பண்ண முடி[illegible]...?"

Mithra Vintha

"முடியும்னு தோணலை... மொத்தம் எழுபத்தேழு பேர் இருக்காங்க... யாரைன்னு கெஸ் பண்ண முடியும்?"

"ஒரு 'க்ளு' இருக்கு..."

"சொல்லுங்க..."

"மோகன்குமாரோடு தொடர்பு வெச்சிருந்த பெண் வைரத் தோடு போட்டிருந்ததாய் எங்களுக்குத் தகவல் கிடைச்சிருக்கு..."

ஹம்சவேணி நிமிர்ந்தாள்.

"வைரத் தோடு போட்டிருந்தாளா?"

"ஆமா..."

"அப்படின்னா... ஷி குட் பி விசாலினி..."

"அவ வைரத் தோடு போட்டிருந்தாளா...?"

"எஸ்... ஆறு மாசத்துக்கு முந்திவரை போட்டிருந்தா. அப்புறம் போட்டுக்கலை..."

சுரேன் மலர்ந்தான்.

"சந்தேகமே இல்லை. மோகன்குமாரோடு தொடர்பு வெச்சிருந்த பெண் அந்த விசாலினிதான். ஆறு மாசத்துக்கு முன்னாடி அந்த வைரத் தோடு திருட்டுப் போயிருக்கு."

"ஈஸிட்...?"

"எஸ்...! அந்த விசாலினி இப்ப ரூம்ல இருக்காளா? வெளியே போயிருக்காளா...?"

"அவ... இங்கேயே இல்லை... நாலு மாசத்துக்கு முன்னாடியே ரூமை வெகேட் பண்ணச் சொல்லிட்டோம்..."



"ஏன்...?"

"விசாலினி கொஞ்சம் இம்மாரல் கேரக்டர்னு கேள்விப் பட்டோம். ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனியில் ஸ்டெனோவா வேலை பார்க்கிறதாய்ச் சொன்னா. அந்த கம்பெனியில் விசாரிச்சப்ப... அவ அங்கே வேலையில் இல்லைங்கிற உண்மை தெரிஞ்சுது. கூப்பிட்டு விசாரிச்சோம். சரியா பதில் சொல்லலை. ஹாஸ்டலை விட்டு வெளியேறச் சொல்லிட்டோம்... அவளும் அந்த நிமிஷமே வெகேட் பண்ணிட்டா..."

"வெகேட் பண்ணிட்டு எங்கே போனான்னு தெரியுமா?"

"ஸாரி... தெரியலை..."

"இங்கே தங்கியிருக்கிற பெண்கள்ல வேற யார்க்காவது தெரியுமா?"

"கேட்டுப் பார்த்தாத்தான் தெரியும். இந்த நேரத்துல ஹாஸ்டல்ல யாருமே இல்லை... எல்லாரும் வேலைக்குப் போயிருக்காங்க... சாயந்தரம் ஆறு மணிக்கு மேல்தான் வருவாங்க...! நீங்க எனக்கு ஆறு மணிக்கு மேல போன் பண்ணுங்க... விபரம் கேட்டு வெச்சிருக்கேன்."

"தேங்க்யூ... பை... த...பை... விசாலினியோட போட்டோ ஏதாவது உங்ககிட்டே இருக்குமா...?"

"இருக்கே...!"

சொன்னவள்-

அந்தப் பெரிய மேஜையின் ட்ராயரைத் திறந்து - 'OUT GOERS' என்று கொட்டை எழுத்தில் எழு[illegible] ஆல்[illegible]தை

MithraVintha

எடுத்து விரித்தாள். சில பக்கங்களைப் புரட்டி - ஒரு பக்கத்தில் விரலை நிறுத்தினாள்.

"ஷி ஈஸ் விசாலினி..."

ஒட்டப்பட்டிருந்த அந்த பாஸ்போர்ட் போட்டோவைக் காட்டினாள். சுரேனும் கவிதாவும் போட்டோவின் மேல் பார்வைகளைப் போட்டார்கள்.

விசாலினி அழகாக இருந்தாள். கண்களில் அந்த மைப்பூச்சு தெரிந்தது. சிரித்தபடி இருந்தாள். அகலமான தோள் பட்டையும் மதர்த்த மார்புகளுமாய் - பார்க்கிறவர்களைக் கிறங்கடித்தாள்.

"விசாலினிக்கு என்ன வயசு இருக்கும்...?"

"முப்பத்தேழிலிருந்து நாற்பதுக்குள்ளே இருக்கலாம்."

"இந்த போட்டோவை நாங்க எடுத்துக்கலாமா...?"

"இன்வெஸ்டிகேஷன் முடிந்ததும் திருப்பிக் குடுத்துடுவீங்கல்ல?"

"ஷ்யூர்..."

"டேக்... இட்..."




'வார்டன், டாக்டரோடு திரும்பி வருவதற்குள் தங்கராஜ் வாந்தி எடுத்தான். வாந்தியில் ரத்தத் துளிகள் தென்பட்டன.

சூப்பிரண்ட் பரபரத்தார்.

"டாக்டர்...! அட்... எனி காஸ்ட்... யூ மஸ்ட் ஸேவ் ஹிம்..."



டாக்டர் அவனைச் சோதித்தார். அரை நிமிஷ சோதனைக்குப் பின் முகம் இருண்டு நிமிர்ந்தார்.

"உடனடியாக ஜி.ஹெச். கொண்டு போகனும். ஹார்ட் பீட்ஸும் பல்ஸும் விழுந்துடுச்சு..."

"என்னாச்சு இவனுக்கு...?"

"தெரியலை... உடனடியாக ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணினா இவனைக் காப்பாத்த முடியும்... ஆம்புலன்ஸுக்கு போன் பண்ணுங்க..."

சூப்பிரண்ட் 'தபதப' வென்று பூட்ஸ் சத்தத்தோடு தன் அறையை நோக்கி ஓடினார்.




ஆறரை மணிக்கு மேல் அருணா வொர்க்கிங் ஹாஸ்டலுக்கு போன் செய்து - ஹம்சவேணியைப் பிடித்தான் சுரேன்.

"என்ன மேடம்... விசாலினியைப் பத்தி மத்த பெண்கள் கிட்டே விசாரிச்சுப் பார்த்தீங்களா...?"

"விசாரிச்சுப் பார்த்தேன்... யார்க்கும் அவ எங்கே போனாள்னு தெரியலை... அவளோட கேரக்டர் இம்மாரல்னு தெரிஞ்சதும்... மத்த பெண்கள் அவகிட்டே நெருங்கிப் பழகாமே தள்ளியே இருந்திருக்காங்க... நீங்க ஒரு காரியம் பண்ணுங்க..."

"சொல்லுங்க மேடம்..."

"சிட்டியில் மொத்தம் ஏழு வொர்க்கிங் உமன் ஹாஸ்டல் இருக்கு... அங்கே போய் நீங்க என்கொயர் பண்ணினா... யூ மே...ஃபைன்ட் அவுட் த பர்ஸன்...

MithraVintha

"நாங்க ஏற்கெனவே விசாரிச்சுப் பார்த்துட்டோம் மேடம். உங்க ஹாஸ்டலை விட்டு வெளியே வந்ததுமே... டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் வொர்க்கிங் உமன் ஹாஸ்டல்ஸ் எங்கெங்கே இருக்குங்கிற லிஸ்ட்டை வாங்கி பைக்கைப் போட்டு அலைஞ்சு விசாரிச்சுட்டோம்... ரிசல்ட் ஃப்ருட்ஃபுல்லா இல்லை."

"அப்படின்னா... விசாலினி சிட்டிக்குள்ளே ஒரு வீடு எடுத்துத் தங்கியிருக்கனும்..."

"என்னோட நினைப்பும் அதுதான்..."

"ஸாரி... ஹாஸ்டல்ல தங்கியிருந்த பெண்களுக்கு விசாலினியைப் பத்தின விபரம் தெரியலை..."

"நோ... ப்ராப்ளம்... கையில் விசாலினியோட போட்டோ இருக்கு... சிட்டிக்குள்ளே அவ எங்கே ஒளிஞ்சிருந்தாலும் கண்டுபிடிச்சுடுவோம்... தேங்க்ஸ்... ஃபார் யுவர் டைம்லி ஹெல்ப்..."

சுரேன் ரிஸீவரை வைத்துவிட்டு - கவிதாவைப் பார்த்தபடி எழுந்தான். "புறப்படு..."

"எங்கே... பாஸ்...?"

"ஹோட்டல் ரிட்ஸ் பேலஸுக்கு..."

"எதுக்கு...?"

"டாக்டர் மோகன்குமார் அந்த ஹோட்டல்ல போய்த் தங்கினது இந்த விசாலினியோடுதானா... இல்லை... வேற எவளோடவாவதான்னு தெரிஞ்சுக்க வேண்டாம்...?"

புறப்பட்டார்கள்.






'ஆம்புலன்ஸ் அலறிக்கொண்டு - சிறைச் சாலைக்குள் நுழைந்தது. இரண்டு ஆர்டர்லிகள் கீழே குதித்து ஸ்ட்ரெச்சரை எடுத்துக் கொண்டு வார்டை நோக்கி ஓடினார்கள். சூப்பிரண்டன்ட் பின்னாலேயே ஓடிவந்தார்.

"க்விக்... க்விக்..."

தபதபவென்று மூச்சிரைக்க ஓட்டம்.

வார்டை நெருங்கி - தங்கராஜ் செல்லுக்குள் நுழைந்தார்கள்.

டாக்டர் எதிர்ப்பட்டார் - உதட்டைப் பிதுக்கிக் கொண்டு.

"நோ...யூஸ்..."

"டாக்டர்!"

"எஸ்...ஹி ஈஸ் டெட்..."

"எ... எப்படி...?"

"இருதயத்துல ஒரு ரத்தநாளம் பர்ஸ்ட்..."

சூப்பிரண்ட் அதிர்ந்து போய் - தங்கராஜை நெருங்கினார். வாயில் ரத்தம் கோடாய் வழிந்திருக்க - திறந்த கண்களோடு இறந்திருந்தான் தங்கராஜ். முகத்தில் இரண்டொரு ஈக்கள் வட்டமடித்துக் கொண்டிருந்தன.

சூப்பிரண்ட் டாக்டரிடம் திரும்பினார்.

"டாக்டர்! ராத்திரி வரைக்கும் ஹி வாஸ் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட்... திடீர்னு இப்ப மட்டும் எப்படி... இந்த ரத்தக்குழாய் வெடிப்பு சாத்தியம்?"

Mithra Vintha

"தங்கராஜ் ஏற்கெனவே ஒரு ஹார்ட் பேஷண்ட். இந்த மாதிரி பேஷண்ட்களுக்கு இது மாதிரியான முடிவு ஏற்படுவது இயற்கை..."

"டாக்டர்... ப்ளீஸ் செக் ஹிம்... இது இயற்கையான மரணம்தானா...?"

"நோ... டவுட்... திஸ் ஈஸ் நேச்சுரல் டெத்..."

டாக்டர் தீர்க்கமான குரலில் சொன்னார்.

## 14

'ஹோட்டல் ரிட்ஸ் பேலஸ்.'

ஹோட்டல் மானேஜர் மணிவர்மாவின் தனியறை. சுரேனும் கவிதாவும் - கையில் வைத்திருந்த பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை அவருடைய முகத்திற்கு முன்பாய் நீட்டினார்கள்.

"இது யார்னு தெரியுதா... மிஸ்டர் மணிவர்மா?"

மணிவர்மாவின் நெற்றி மேலே ஏறியது.

"இ... இது... இது..."

"ம்... சொல்லுங்க..."

"டாக்டர் மோகன்குமாரோட வந்த பெண்..."

"சந்தேகம் இல்லையே...?"

"நோ... நோ... அவளேதான்... அயாம் ஷ்யூர் அபௌட் இட்... பை... த... பை... இந்த போட்டோ உங்களுக்கு எப்படிக் கிடைச்சது...?"



"அவ தங்கியிருந்த ஹாஸ்டலிலிருந்து வாங்கினோம்... ஆனா... அட் ப்ரஸண்ட் அந்த ஹாஸ்டலில் அவ இல்லை. சிட்டிக்குள்ளே வேற எங்கேயோ தங்கியிருக்கா..."

"டாக்டர் மோகன்குமார் கடத்தப்பட்டது அவளோட வேலையா இருக்கும்னு நினைக்கறீங்களா...?"

"இருக்கலாம்..."

"அவரை அவ எதுக்காகக் கடத்தணும்...?"

"இன்னும் ரெண்டு நாள்ல அதுக்கான காரணம் தெரிஞ்சுடும்." மணிவர்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு - இரண்டு மணி நேரம் பயணம் செய்து - சென்னை திரும்பி - தன்னுடைய அலுவலக அறைக்குள் - கவிதா பின்தொடர - சுரேன் நுழைந்தபோது, டெலிபோன் அலறிக் கொண்டிருந்தது.

வேகமாய்ப் போய் ரிஸீவரை அள்ளினான்.

"ஹலோ..."

"யாரு சுரேனா...?"

"ஆமா..."

"நான் நிஜங்கள் பத்திரிகையின் ரிப்போர்ட்டர் ஜெய கிருஷ்ணன் பேசறேன்..."

"ஜெயகிருஷ்ணனா...? என்ன விஷயம்... ஸார்..."

"காலையிலிருந்து ஏழெட்டுத் தடவை போன் பண்ணிப் பார்த்துச் சலிச்சுட்டேன். ஆமா, எங்கே போயிட்டீங்க...?"

"ஒரு கேஸ் விஷயமா மகாபலிபுரம் வரைக்கும் போக வேண்டியிருந்தது. போய்ட்டு இப்[illegible]

MithraVintha

நுழைந்தேன்... உங்க போன். என்ன விஷயம் ஸார்... தங்கராஜைத் தூக்குல போடற தேதி தள்ளிப் போயிடுச்சா...?''

"தேதி தள்ளிப் போகலை..."

"பின்னே...?"

"ஆளே போயிட்டான்..."

"ஏ... என்ன ஸார்... சொல்றீங்க...?"

"ஆமா சுரேன்... நேத்து ராத்திரி வரைக்கும் ஆரோக்கியமா இருந்தவன்... காலையில் ரத்தமா வாந்தி எடுத்து - மண்டையைப் போட்டுட்டான்..."

"அப்படின்னா... அந்த உண்மைகள்...?"

"அவனோடவே அடங்கிப் போச்சு...!"

"ஸார்..."

"என்ன...?"

"இதுல ஏதோ சதி இருக்கு..."

"தங்கராஜ் கொலை செய்யப்பட்டிருக்கலாம்னு சொல்ல வர்றீங்களா?"

"ஆமா..."

"அவனோட மரணம் இயற்கையானதுதான்னு... ஒரு டாக்டர் மட்டுமில்லை. பத்துப்பேர் அடங்கிய டாக்டர் குழுவே தீர்க்கமா சொல்லிடுச்சு..."






டாக்டர் மோகன்குமாரின் பங்களா.

காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு - ரூபாவும் பிரதாப்பும் கீழே இறங்கி உள்ளே போனார்கள். சூட்கேஸுக்குள் துணிமணிகளை வைத்து - பூட்டிக் கொண்டிருந்த - கமலாவைப் பார்த்ததும் ஆச்சர்யப்பட்டார்கள்.

ரூபா கேட்டாள்.

''எங்கேம்மா கிளம்பிட்டே...?''

''நானே உனக்கு போன் பண்ணி சொல்லலாம்னு இருந்தேன்... ரூபா. உங்கப்பா இல்லாத இந்த வீட்ல... என்னால தனியா இருக்க முடியலை... என்னை மறந்து தூங்கற நேரத்தைத் தவிர - மத்த நேரமெல்லாம் அவர் ஞாபகமாகவே இருக்கு... இந்த வீட்ல இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் ரணம் மாதிரி இருக்கு... அதனால கொஞ்ச நாளைக்குக் குன்னூர்ல இருக்கிற என்னோட அண்ணன் வீட்ல இருந்துட்டு வரலாம்னு புறப்பட்டேன்...''

''ஏம்மா... எங்ககூட வந்து இருக்கலாமில்லையா...?''

''இந்த ஊரிலேயே இருக்கக் கூடாதுன்னு நான் நினைக்கிறேன்...''

பிரதாப் குறுக்கிட்டான்.

''ரூபா...! உங்க அம்மா குன்னூர்க்குப் போய் அவங்க அண்ணன் வீட்ல தங்கறதுதான் சரி... புதிய ஊர், புதிய சூழ்நிலை... அவங்க மனசுக்கு இதமா இருக்கும்...! அத்தே! நீங்க புறப்படுங்க...! மாமாவைக் கண்டுபிடிக்கிற பொறுப்பை தேர்ட் - ஐ டிடெக்டிவ் ஏஜென்ஸிகிட்ட...

MithraVintha

இன்னும் ஒரு வார காலத்தில் அவங்க எப்படியும் மாமாவைக் கண்டுபிடிச்சுடுவாங்க...''

''கண்டிப்பா அவங்க கண்டு பிடிச்சுடுவாங்களா... மாப்ளே...?''

''நிச்சயமா...''

''அவரைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சா... உடனடியா குன்னூர்க்கு போன் பண்ணித் தகவல் குடுங்க... நான் வந்துடறேன்...'' கமலா சொல்லிக்கொண்டிருக்கும்போதே போர்டிகோவில் பைக் சத்தம் கேட்டது.

பிரதாப் எட்டிப் பார்க்க-

பைக்கிலிருந்து சுரேனும் கவிதாவும் இறங்கிக் கொண்டிருந்தார்கள், ''ரூபா! அவங்களே... வந்துட்டாங்க...''

''வாங்க... மிஸ்டர் சுரேன்... இப்பத்தான் உங்களைப் பற்றி பேசிட்டிருந்தோம்... இன்வெஸ்டிகேஷன் எவ்வளவு தூரத்தில் இருக்கு...?''

''விசாலினி இருக்கிற இடத்தைக் கண்டுபிடிச்சாதான் கேஸ் மேற்கொண்டு நகரும். நாங்களும் ஆனவரைக்கும் முயற்சி பண்ணிப் பார்த்துட்டோம்... அவ இருக்கிற இடத்தை ட்ரேஸ் பண்ண முடியலை...''

''மிஸ்டர் சுரேன்! எனக்கொரு யோசனை.''

''சொல்லுங்க...''

''விசாலினியோட போட்டோவை பேப்பர்க்கு குடுத்து. காணவில்லைன்னு விளம்பரம் செஞ்சு பார்க்கலாமே...''



''இன்னும் ரெண்டு நாள் பார்த்துட்டு விளம்பரம் தர்ற எண்ணத்துலதான் நானும் இருக்கேன்...''

கமலா சுரேனை ஏறிட்டாள்.

''தம்பி...! உங்களைப் பத்தி - என்னோட மகளும் மாப்பிள்ளையும் பெருமையா சொன்னாங்க... என்னோட கணவரைக் கண்டுபிடிச்சுக் குடுக்க வேண்டியது உங்க பொறுப்பு...''

''கவலைப்படாதீங்கம்மா... எங்க ஏஜென்ஸி ஆரம்பிச்சு பத்து வருஷமாச்சு... இதுவரைக்கும் ஒரு கேஸைக்கூட கண்டுபிடிக்காமே விட்டதில்லை... இன்னும் ஒரு வாரத்துக்குள்ள உங்க கணவரை எப்படியும் உங்க முன்னாடி கொண்டு வந்து நிறுத்திடுவோம்... இப்ப நாங்க இங்கே வந்தது உங்ககிட்டயிருந்து டாக்டரைப் பத்தின சில விபரங்களைத் தெரிஞ்சுக்கத்தான்...''

''கேளுங்க... தம்பி...''

''டாக்டர்... மாசத்துல எத்தனை நாள் வெளியூர் டூர் போவார்...?''

''அதிகபட்சம் ரெண்டு தடவை...''

''எந்த ஊருக்கெல்லாம் போவார்னு சொல்ல முடியுமா...?''

''அதிகமா பெங்களூர், பாண்டிச்சேரின்னு போவார்... ஒரு தடவை மட்டும் கோவா போனார்...''

''அவர் வெளியூர் போனதுக்குக் காரணம் விசாலினியோடு தங்கியிருந்துட்டு வரத்தானே...?''

''அப்படித்தான் இருக்கணும்...''


MithraVintha

''உங்க கணவர் நடத்தையில் உங்களுக்குச் சந்தேகம் வரலையா?''

''தெரியாது...''

''எந்தெந்த ஹோட்டலில் தங்கியிருந்தார்னு தெரிஞ்சா... இன்வெஸ்டிகேஷனுக்கு உதவியா இருக்கும். விசாலினியோட போட்டோவைக் காட்டி அந்த ஹோட்டல்களிலேயும் விசாரிக்கலாம். இல்லையா...?''

''எனக்குத் தெரியாது தம்பி...''




ஜெயில் சூப்பிரண்ட் - யூனி·ஃபார்மைத் தவிர்த்துவிட்டு - வேஷ்டி ஜிப்பாவில் போலீஸ் துறை அமைச்சரின் முன்பு பவ்யமாய் நின்றிருந்தார்.

''என்ன துரைராஜ்... டிபார்ட்மெண்டுக்குள்ளே எந்த பிரச்னையும் இல்லையே?''

''டிபார்ட்மெண்ட்ல எந்த பிரச்னையும் இல்ல, ஸார்... இந்த பத்திரிகைக்காரங்கதான்... தங்கராஜ் செத்தது பற்றி... கிளறிக்கிட்டே இருக்காங்க...''

அமைச்சர் சிரித்தார்.

''பத்திரிகைக்காரங்களைப் பத்தி கவலைப்படாதீங்க...! எந்த நடிகைக்காவது ரெட்டைக் குழந்தை பிறந்தா... தங்கராஜ் செத்துப் போனதை மறந்துடுவாங்க...''

''இருந்தாலும் ஸார்...''



''இதோ... பாருங்க துரைராஜ்... தங்கராஜ் செத்துப் போனதுக்கு நீங்கதான் காரணம்னு வெளியே யார்க்கும் தெரியப்போறதில்லை. ஏன்னா... நீங்க அந்தக் காரியத்தை ரொம்பவும் நுணுக்கமா பண்ணியிருக்கீங்க... தங்கராஜ் குடிக்கிற தண்ணியில் - கடந்த ஒரு மாச காலமா ஸ்லோ பாய்சன் ஆர்சானிக்கைக் கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து - ரெண்டு நாளைக்கு முன்னாடி - கணக்கையும் முடிச்சு அனுப்பிட்டீங்க... தங்கராஜ் செத்தது ஆர்சானிக் விஷத்தால்தான்னு எந்த டாக்டராலும் சொல்ல முடியலை... அப்படிச் சொல்லவும் முடியாது. ஏன்னா உங்களுக்கு நான் குடுத்தது அப்பேர்ப்பட்ட பாய்சன்...''

''ஸார்...''

''ம்...''

''தங்கராஜ் செத்தது பற்றி விசாரணை கமிஷன் அமைக்கப் படணும்னு எதிர்க்கட்சிக்காரங்க சொல்லிட்டிருக்காங்களே...''

''சொல்லிட்டே இருக்கட்டும்...'' அமைச்சர் சிகரெட் ஒன்றை உதட்டில் பொருத்திக் கொண்டு சிரித்தார். ''தங்கராஜ் மட்டும்... தன்னோட வாக்குமூலத்தைக் குடுத்திருந்தா ஆளும் கட்சியில் இருக்கிற சில முக்கியமான புள்ளிகள் கைக்குக் காப்பு ஏறியிருக்கும். அதைத் தடுத்து நிறுத்தின உங்களுக்கு... கூடிய சீக்கிரமே... ஒரு ப்ரமோஷனுக்கு ஏற்பாடு பண்றேன்! நீங்க எதைப் பற்றியும் கவலைப்படாமே...எப்பவும் போல ட்யூட்டியைப் பாருங்க துரைராஜ். ஏதாவது பிரச்னை வந்தா நான் இருக்கேன்...''

''எஸ்... ஸார்...''

Mithra Vintha
PUBLIC LIBRARY

''பத்திரிகைக்காரங்ககிட்டே மட்டும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்துக்குங்க. கூடிய வரைக்கும் அவாய்ட் பண்ணிடுங்க...''

''எஸ்... ஸார்...''

''அப்புறம்... உங்களுக்குத் தர்றதா சொன்ன அமௌண்ட் இன்னும் ரெண்டு நாள்ல உங்க வீட்டுக்கு வந்து சேரும்...''

சந்தோஷமாய்த் தலையாட்டி - சல்யூட் ஒன்றை வைத்துவிட்டு - நகர்ந்தார், ஜெயில் சூப்பிரண்ட் துரைராஜ்.

## 17

குன்னூர்.

சில்வர் க்ரீன் எஸ்டேட்டுக்குள் - வளைந்து வளைந்து போன - மண்பாதையில் காரை விரட்டி - தென்பட்ட பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்து - போர்டிகோவில் நிறுத்தினாள் கமலா. போர்டிகோ வராந்தாவில் உட்கார்ந்து - ஆங்கிலத் தினசரியைப் படித்துக் கொண்டிருந்த பால்ராஜ், காரைப் பார்த்ததும் எழுந்தார்.

''கமலாவா... வா... வா...''

கமலா படியேறி அவரை நெருங்கினாள்.

''அண்ணா...! அவர் எப்படி இருக்கார்...?''

''உன் வீட்டுக்காரர்தானே...? பரம சௌக்கியம்! ஆமா...நீ என்ன உன் பாட்டுக்கு திடீர்னு சொல்லாமே கொள்ளாமே வந்துட்டே...''



''என்னால அங்க இருக்க முடியலை...''

''ரூபாகிட்டே சொல்லிட்டுத்தானே வந்தே...''

''ஆமா...''

''என்னான்னு சொல்லிட்டு வந்தே...?'

''உங்கப்பா இல்லாத இந்த வீட்ல என்னால் இருக்க முடியலை. ஒரு சேஞ்சுக்காக... என்னோட அண்ணன் வீட்ல இருந்துட்டு வர்றேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.''

''சரி... வா... மாப்பிள்ளையைப் பார்ப்போம்...''

பால்ராஜ் முன்கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டு - கமலாவை உள்ளே அழைத்துப் போனார்.

''அண்ணா! வேலைக்காரங்க...?''

''இப்பத்தான்... புறப்பட்டுப் போனாங்க...''

பூஜை அறைக்குள் நுழைந்தார் பால்ராஜ்.

''அவர்... என்னண்ணா பண்ணிட்டிருக்கார்...?''

''வேளா வேளைக்கு நிம்மதியா சாப்டுட்டு - ஹாயா புஸ்தகம் படிக்கிறார். படிக்க போர் அடிச்சா... வீடியோ பார்க்கிறார். ரெண்டு நாளா... ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கார்... காரணம்...?''

''தெரியும்...''

''சொல்லு... பார்க்கலாம்.''

''தங்கராஜ் செத்துட்டான்...''

''அதேதான்...''

MithraVintha

பூஜையறையில் சுவரோரத்தை அடுத்த - தரைவிரிப்பை நகர்த்திவிட்டு - பதித்திருந்த கடப்பைக் கல்லை நகர்த்தினார் பால்ராஜ்.

தரைக்குக் கீழே படிகள் தெரிந்தன.

இறங்கினார்கள்.

இறங்க இறங்க - உள்ளே ட்யூப் லைட் வெளிச்சம் கண்ணில் அடித்தது. அறையின் மையத்தில் - ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபடி - டி.வி.யில் கிரிக்கெட் மாட்ச் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் மோகன் குமார் திரும்பினார்.

மலர்ந்தார்.

"அடேடே... கமலாவா...?"

கமலா அவரை நெருங்கி - கண்களில் நீர் மல்கப் பார்த்தாள். "பத்து நாளைக்குள்ள பாதியா இளைச்சுப் போயிட்டீங்க..."

"பயமே என்னைத் தின்னுடுச்சு கமலா..."

"இனிமே நீங்க பயப்பட வேண்டியதில்லை... அந்த தங்கராஜ் செத்துட்டான்."

பால்ராஜ் குறுக்கிட்டார். "கமலா...! தங்கராஜ் செத்துப் போனது மாப்பிள்ளைக்குப் பெரிய ரிலீஃப்தான். நான் இல்லைன்னு சொல்லலை... அவன் உயிரோடு இருந்திருந்தா... 'விசாலினியைக் கொலை செஞ்சது நான்தான். அவளைக் கொலை செய்யும்படியா சொன்னது டாக்டர் மோகன் குமார்தான்'னு நிச்சயம் சொல்லியிருப்பான். அவன் காட்டிக் கொடுத்த வி.ஐ.பி.க்களில் மாப்பிள்ளையும் ஒருத்தரா இருந்திருப்பார். அந்தப் பழியில் தப்பிப்பதற்காக -



மாப்பிள்ளையை யாரோ கடத்திக்கிட்டு போன மாதிரி செட்டப் பண்ணி, அவரை இங்கே கொண்டு வந்தோம். அந்தப் பழியைத் தூக்கித் 'தீப்பொறிகள்' இயக்கத்து மேலே போட்டோம்... மாப்பிள்ளையோட அதிர்ஷ்டம், தங்கராஜ் ஜெயில்ல ரத்தம் ரத்தமா கக்கிச் செத்துட்டான்... இனிமே மாப்பிள்ளை தைரியமா வெளியே வந்து... ஏதாவது ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் - 'தீப்பொறிகள் என்னைக் கடத்திட்டுப் போனாங்க... நான் எப்படியோ தப்பிச்சிட்டு வந்துட்டேன்'னு சொல்லி - தான் கடத்தப்பட்ட சம்பவத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம். ஆனா... இப்ப பிரச்னை வேறவிதமா விஸ்வரூபம் எடுத்தாச்சு..."

"நீங்க என்னண்ணா சொல்றீங்க...?"

"பிரச்னை உனக்கு என்னான்னு புரியலையாம்மா...? உன்னோட மகளும், மருமகனும் 'மாப்பிள்ளையை' நிஜமாகவே யாரோ கடத்திட்டுப் போனதா நினைச்சு டிடெக்டிவ் ஏஜென்ஸி வெச்சு நடத்திட்டிருக்கிற - சுரேன் - கவிதாகிட்டே போய் விஷயத்தைச் சொல்லியிருக்காங்க. அந்த சுரேன் கெட்டிக்கார ஆசாமி... கேஸை எடுத்துக்கிட்டுக் கிளற ஆரம்பிச்சுட்டான். விளைவு, மாப்பிள்ளை தொடர்பு வெச்சிருந்த அந்தப் பெண்ணோட பேர் விசாலினிங்கிற உண்மைவரைக்கும் கண்டுபிடிச்சுட்டான். போகிற போக்கைப் பார்த்தால்... 'விசாலினி உயிரோடு இல்லை. அவளைத் தங்கராஜ் மூலமா கொலை செய்தது டாக்டர் மோகன் குமார்'தான்னு கண்டுபிடிச்சு போலீஸுக்குத் தகவல் சொல்லி விடுவான் போலிருக்கே. எந்த விஷயம் போலீஸ்வரைக்கும் போகக்கூடாதுன்னு நினைச்சோமோ... அது கூடிய சீக்கிரமே போயிரும் போலிருக்கு..."

MithraVintha

"இப்ப என்னண்ணா பண்றது...?"

"இந்த பிரச்னையிலிருந்து மாப்பிள்ளை தப்பிக்கணும்னா ஒரேயொரு வழிதான் இருக்கு..."

"என்ன...?"

"அந்த சுரேன் - கவிதா உயிரோடு இருக்கக் கூடாது..."

"அ... அண்ணா...!"

"வேற வழியில்லேம்மா... விசாலினியை உன் வீட்டுக்காரர் தங்கராஜ் மூலமா தீர்த்துக் கட்டின விஷயம் வெளியே வராம இருக்கணும்னா- சுரேன் -கவிதாங்கிற ரெண்டு வழிகளை முடித்தான் ஆகணும்..."

"அ... அதெல்லாம்... வேண்டாம்ணா...! அந்த சுரேன் கவிதாவாலே விசாலினி இறந்து போயிட்டதைக் கண்டுபிடிக்க முடியாது..."

"அப்படி நினைக்காதேம்மா... அந்த சுரேன்- கவிதாவைப் பத்தி நல்லா விசாரிச்சுப் பார்த்துட்டேன்... ரெண்டு பேருமே கில்லாடிங்க... விசாலினி கொலை செய்யப்பட்டதை எப்படியும் கண்டுபிடிச்சுடுவாங்க... அவங்களுக்கு அந்த உண்மை தெரியறதுக்குள்ளே தீர்த்துக்கட்றது உத்தமம்... இப்ப நமக்கு இருக்கிற ஒரே இடைஞ்சல் அவங்கதான்...! அந்த இடைஞ்சலையும் சுத்தமாக்கிட்டா... உன் வீட்டுக்காரர் தைரியமா வெளியே வரலாம்... போலீஸ்கிட்டே போய் - இஷ்டத்துக்குத் தான் கடத்தப்பட்டதைப் பத்தி கதை அளக்கலாம்... போலீஸ் 'தீப்பொறி' இயக்கத்தைச் சேர்ந்த ஆட்களை வழக்கம் போல் தேடிட்டு இருக்க... நீயும் மாப்பிள்ளையும் சந்தோஷமா இருக்கலாம்..."



டாக்டர் மோகன்குமார் பெருமூச்சுவிட்டார். "ரிட்ஸ் பேலஸ் ஹோட்டல் மானேஜர் மட்டும்... அன்னிக்கு காலையில வீட்டுக்கு வந்து வைரத் தோட்டைப் பத்தி - எதுவும் சொல்லாமேயிருந்திருந்தா... யாருக்குமே விசாலினியைப் பத்தி தெரிஞ்சிருக்காது... எல்லாத்தையும்விட நம்ம பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் நான் ஒரு பெண்ணோட தொடர்பு வெச்சிருந்தது தெரிஞ்சு போச்சேன்னு குறுகுறுப்பாயிருக்கு..."

கமலா தன் கணவனை வெறுப்பாகப் பார்த்தாள். "அதையெல்லாம் அந்தப் பொம்பளைகிட்டே பழக்கம் வெச்சிருக்கிறதுக்கு முன்னாடி யோசிச்சுப் பார்த்திருக்கணும்... இப்ப வந்து குறுகுறுக்குதுன்னா என்ன அர்த்தம்...?"

பால்ராஜ் குறுக்கிட்டார்.

"உன்னோட பழைய பல்லவியை ஆரம்பிச்சுட்டியா...? பழையதைப் பத்தி பேசிட்டிருக்கிறதுல ஒரு பிரயோஜனமும் இல்லை கமலா... உன்னோட கணவரை இந்த இக்கட்டிலிருந்து பத்திரமா மீட்டாகணும். தங்கராஜ் ஜெயில்ல செத்துப் போனது நம்ம அதிர்ஷ்டம். அந்த அதிர்ஷ்டத்தை நாம பயன்படுத்திக் கணுன்னா சுரேன் - கவிதாவை முடிக்கணும்."

"சரி... அவர்களை எப்படி முடிக்கிறது...?"

"அதுக்கும் ஏற்பாடு பண்ணிட்டேன்."

"ஏற்பாடா...? என்ன ஏற்பாடு...?"

"நம்ம எஸ்டேட் லேபர் பிரச்னையை யெல்லாம் வன்முறையை உபயோகப்படுத்தி அடக்கி வைக்கிற ராஜய்யனைத்தான் அனுப்பி வெச்சிருக்கேன்... இடுப்புல சைலன்சர் துப்பாக்கியோடு - இந்நேரம் சுரேன் - கவிதாவை

MithraVintha

க்ளோஸா ஃபாலோ பண்ணிட்டிருப்பான். சூழ்நிலையும் சந்தர்ப்பமும் சாதகமா வாய்க்கும்போது - பிஸ்டலில் இருக்கிற தோட்டா அவங்க உடம்புக்குள்ளே இருக்கும்... சுரேன்-கவிதாவை முடிச்சுட்டேன்னு எந்த நிமிஷமும்... ராஜய்யன்கிட்டேயிருந்து போன் வரலாம்..."

"அண்ணா..."

"ம்..."

"இந்த நிலத்தடி ரூமுக்குள்ளே... இவர் இருக்கிறது அந்த ராஜய்யனுக்குத் தெரியுமா...?"

"தெரியும்..."

"அண்ணா...! நமக்கு விசுவாசமா... அவன்...?"

"கண்டிப்பா இருப்பான்... ராஜய்யன் இருபது வருஷமா இந்த வீட்டு உப்பை தின்னுட்டு வர்றவன்... அவனை நம்பி எந்தக் காரியத்தையும் தரலாம்... எந்தப் பிரச்னையா இருந்தாலும் துல்லியமா முடிச்சு வெப்பான்..."

## 18

ராஜய்யன் அந்த டெலிபோன் பூத்துக்குள்ளிருந்து - சுரேனுக்குப் போன் செய்து பேசிக் கொண்டிருந்தான். நேரம் ராத்திரி எட்டு மணி.

"ஹலோ... தேர்ட் ஐ டிடெக்டிவ் ஏஜென்ஸி...?"

"எஸ்..."

"மிஸ்டர் சுரேன்...?"

"நான்தான் சுரேன்..."



"குட்ஈவினிங் மிஸ்டர் சுரேன்... என் பேர் ராமச்சந்திரன். நான் ஒரு டயமண்ட் மெர்ச்செண்ட். பிறந்தது வளர்ந்தது எல்லாமே மெட்ராஸ்தான்னாலும் இப்ப இருக்கிறது மும்பைல. காரணம் பிசினஸ்..."

"சரி... என்ன விஷயம்...?"

"எனக்குள்ள ஒரு பிரச்னை... உங்ககிட்ட பர்சனலா பேசணும். நேரம் ஒதுக்கி அப்பாயிண்ட்மெண்ட் குடுக்க முடியுமா...?"

"நாளைக்குக் காலையில் பதினோரு மணிக்கு வாங்க..."

"இன்னிக்கே நேரம் ஒதுக்க முடியாதா...?"

"ஸாரி... நான் இன்னும் பத்து நிமிஷத்தில் இங்கிருந்து கிளம்பி ஒருத்தரை மீட் பண்ண வேண்டியிருக்கு... நீங்க காலையில் வந்துட்டா... எனக்கு வசதியா இருக்கும்..."

"மிஸ்டர் சுரேன்! நான் உங்ககிட்டே சொல்லப்போகிற விஷயம் ஹைலி அண்ட் ப்யூர்லி கான்ஃபிடென்ஷியல்..."

"என்னோட டிடெக்டிவ் ஏஜென்ஸி ஒரு எஃகு கோட்டை. அதுக்குள்ளே வர்ற விஷயங்கள் வெளியே போகாது..."

"தேங்க்யூ... நாளைக்குக் காலையில பதினோரு மணிக்கு வர்றேன்."

"வாங்க..." ராஜய்யன் ரிஸீவரை வைத்துவிட்டு - பூத்தை விட்டு வெளியே வந்து - எதிரில் இருந்த - சுரேனின் டிடெக்டிவ் ஏஜென்ஸி ஆபீஸை ஏறிட்டான். ஜன்னலில் ட்யூப் லைட் வெளிச்சம் தெரிந்தது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது அணைந்தது.

Mithra Vintha

அதைத் தொடர்ந்து சுரேனும் கவிதாவும் வெளிப்பட்டார்கள். ராஜய்யன் மறைவாய் நிறுத்தியிருந்த தன்னுடைய பைக்கை நோக்கிப் போனான்.




சுரேன் பைக்கை உதைத்து அதன்மேல் பரவ- கவிதா பில்லியனில் தொற்றிக் கொண்டாள்.

"பாஸ்..."

"ம்..."

"நாளைக்கு ஒருநாள் எனக்கு லீவு வேணும்..."

"எதுக்கு...?" பைக் கிளம்பியது.

"என் ஃப்ரெண்ட் ஒருத்திக்குச் சீமந்தம்..."

"யார்க்கு... அம்சலட்சுமிக்கா...?"

"இல்ல..."

"பின்னே... சசிகலாவுக்கா...?"

"அய்யோ... நீங்க வேறே... அவளுக்கு இன்னும் கல்யாணமே ஆகலை..."

"சரி, நீயே சொல்லு..."

"கல்யாணிக்கு..."

"கறுப்பா... ஒட்டடைக் குச்சி மாதிரி ஒரு பொண்ணு உன்னைத் தேடிக்கிட்டு வருமே, அதுக்கா...?"

"ஆமா..."



"ஆச்சர்யமாயிருக்கு..."

"என்ன ஆச்சர்யம்...? சீமந்தம் நடக்கிறதா...?"

"இல்ல... அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் நடந்ததே ஆச்சர்யமாயிருக்கு.. எவன் கட்டிக்கிட்டான்...?"

பைக் டி.பி. ரோட்டில் திரும்பியது. "கல்யாணியை இப்ப பார்த்தீங்கன்னா ஆச்சர்யமாயிருக்கும்... கல்யாணமானதும் மூஞ்சியில ஒரு களையே வந்துடுச்சு..."

"உனக்கும் அப்பத்தான் 'களை' வரும் போலிருக்கு."

"என்ன சொன்னீங்க...? 'பாஸ்'னு கூடப் பார்க்காம அப்படியே முதுகுல குத்திடுவேன்."

"சரி... சரி... உன்னை எங்கே இறக்கி விடட்டும்? அக்கா வீடா...? உன் வீடா...?"

"இன்னிக்கு அக்கா வீடு. அத்தான் வெளியூர் போயிட்டாராம். துணைக்கு வரச்சொல்லிட்டுப் போனா..."

பைக் ஆரோக்கியசாமி ரோட்டில் திரும்பி- வரிசையாய் வந்த பங்களாக்களைத் தாண்டி-பின் வந்த ஒரு வீட்டுக்கு முன்னால் நின்றது.

கவிதா இறங்கிக் கொண்டே கேட்டாள்.

"அப்ப... நீங்க...?"

"ஹோட்டல் சில்வர் கேட்டில் டாக்டர் மோகன்குமார் ஒரு தடவை ரூம் எடுத்து தங்கியிருந்ததாய் - என்னோட ஃபேமிலி டாக்டர் சொன்ன தகவலை வெச்சு - இப்ப அங்கேதான் விசாரிக்கப் போயிட்டிருக்கேன்... விசாரணையை முடிச்சுக்கிட்டு நேரா வீடுதான்..."

MithraVintha

"ஓ...கே... குட் நைட்..."

"குட் நைட்..."

பைக் கிளம்பியது.




கவிதாவை அவளுடைய அக்கா வீட்டில் இறக்கிவிட்டு - வேகமாய்க் கிளம்பிய - சுரேனின் பைக்கைத் தொடர்ந்தான் ராஜய்யன்.

'அந்த சுரேன் யாரைப் பார்க்கப் போகிறான்?'

'பின் தொடரலாம்...'

'சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வாய்த்தால் -

ஆளையும் தீர்த்துக் கட்டிவிடலாம்...'

இடைவெளி விட்டு - சுரேனின் பைக்கை ஃபாலோ செய்தான் ராஜய்யன். ரோட்டில் வாகனப் போக்குவரத்து குறைவாய் இருந்தது.

சில நிமிஷப் பயணம்தான்.

சுரேனின் பைக் 'சில்வர் கேட்' ஹோட்டலுக்குள் நுழைந்தது. டூ-வீலர்ஸ் பார்க்கிங்கில் போய் நின்றது. ராஜய்யனும் பின் தொடர்ந்து - பைக்கைச் சற்று தள்ளி நிறுத்தி இறங்கி ஸ்டாண்ட் இட்டான்.

ஹோட்டல் சந்தடியில்லாமல் நிசப்தமாய் இருந்தது.

'இந்த சுரேன் யாரைப் பார்ப்பதற்காக - இந்த ஹோட்டலுக்கு வந்திருக்கான்...?'



ரிஷப்ஷன் கௌண்டரை நோக்கிச் செல்லும் சுரேனை மிக மெதுவான நடையில் பின் தொடர ஆரம்பித்தான் ராஜய்யன்.




சுரேன் ரிசப்ஷன் கௌண்டரை நெருங்கி - வழக்கம்போல் தன்னை போலீஸ் டிபார்ட்மெண்ட் என்று சொல்லிக் கொண்டு - பேச்சை ஆரம்பித்தான்.

"டாக்டர் மோகன்குமார் கடத்தப்பட்ட நியூஸை பேப்பர்ல பார்த்திருப்பீங்க...?"

"ஆமா..."

"அவர்... இங்கே வந்து தங்கற பழக்கமுண்டா...?'

"இல்லை..."

"உங்க ஹோட்டலில் அவர் தங்கியிருந்ததாய் ஒருத்தர் சொன்னாரே...?"

"டேட் சொல்ல முடியுமா?"

"ஸாரி... டேட் தெரியலை..."

"டேட் தெரியாமல் கண்டுபிடிப்பது கஷ்டம்..."

சுரேன் தன் சட்டைப் பையில் இருந்த போட்டோவை எடுத்தான். போட்டோவில் சிரித்த விசாலினியைக் காட்டினான்.

"இந்தப் பெண் யார்னு தெரியுதா...?"

"தெரியலை..."

MithraVintha

"இந்த ஹோட்டலுக்கு மானேஜர் யார்...?"

"மிஸ்டர் ஜெயராஜ்..."

"இருக்காரா...?"

"வெளியே போயிருக்கிறார்... லேட் நைட்தான் திரும்பு வார்."

"காலையில் வந்தால் பார்க்கலாமா?"

"பார்க்கலாம்..."

"ஏழு மணிக்கு?"

"பார்க்கலாம்..."

"தேங்க்யூ..." சொல்லி நகர முயன்ற சுரேன், மறுபடியும் நின்றான். "டாய்லெட் எந்தப் பக்கம் இருக்கு...?"

"தட் சைடு..."

வராந்தாவின் கோடியைக் காட்டினான் ரிசப்ஷனிஸ்ட் இளைஞன். மறுபடியும் "தேங்க்யூ..." சொல்லி - நிசப்தமான அந்த நீள வராந்தாவின் கடைசியில் இருந்த டாய்லெட்டை நோக்கி நடந்தான்.

## 22

ராஜய்யன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

ஹோட்டலின் சூழ்நிலை பாலைவனமாய் வெறிச்சிட்டது. ரிசப்ஷன் கௌண்டரில் இருந்த இளைஞன் - லெட்ஜர்க்குள் புதைந்துவிட - வராந்தாவின் கோடியை நோக்கிப் போகும் சுரேனைப் பின் தொடர்ந்தான் மெல்ல.



மறுபடியும் மனசுக்குள் கேள்வி முளைத்தது.

'இவன் எங்கே போகிறான்...?'

ராஜய்யன் - சத்தம் எழாமல் பூனை நடைபோட்டான். ஒரு நிமிஷ நடைக்குப் பின் - லேசாய் ஆச்சர்யப்பட்டான்.

'அட! டாய்லெட்டுக்குள் நுழைகிறான்!'

'டாய்லெட்டுக்குள் இவனை முடித்து விடலாமா...?'

'சுற்றுப்புறச் சூழ்நிலையும் சாதகமாக இருக்கிறது...'

இடுப்பிலிருந்த ரிவால்வரைத் தொட்டுக் கொண்டே - டாய்லெட்டை நெருங்கிக் கதவின் மேல் கையை வைத்தான்.

தள்ளினான்.

கதவு விரியத் திறந்து கொள்ள - உள்ளே நுழைந்தான்.

டாய்லெட் வெறிச்சிட்டது.

'எங்கே... சுரேனைக் காணோம்? யூரின் ஸெல்கள் இருந்த உட்பக்கமாய்ப் போனான்.

'த்தட்...'

பின் பக்கமாய் ஏதோ சத்தம் கேட்க... திரும்பினான். டாய்லெட் கதவின் மறைவில் இருந்த சுரேன் சட்டென்று வெளிப்பட்டு - வெளியே பாய்ந்து கதவைச் சாத்திக் கொண்டிருந்தான்.

"ஏ... ஏய்..."

ராஜய்யன் ஓடி வருவதற்குள் - சுரேன் - கதவை அழுத்தமாய்ச் சாத்தி நாதாங்கியைப் போட்டான்.

MithraVintha

## போலீஸ் ஸ்டேஷன்




இடுப்பில் ஜட்டியோடு இருந்த ராஜய்யனைத் தலைகீழாய்க் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன், சப்-இன்ஸ்பெக்டர் முகுந்தன் கைகளில் லட்டியோடு நின்றிருந்தார்கள். பக்கத்தில் சுரேன்.

சிரித்துக் கொண்டே சொன்னான்.

"ராஜய்யா! எல்லார்க்கும் ரெண்டு கண். ஆனா எனக்கு மட்டும் நாலு கண். எனக்குப் பின்னாடி வந்த எந்த பைக்கையும் நான் கவனிக்காமே விட்டதில்லை... உன்னைச் சரியானபடி ரிமாண்ட் பண்ணத்தான் டாய்லெட்டுக்குப் போனேன்...! போலீஸ் அடியைப் பத்தி உனக்குத் தெரியுமோ தெரியாதோ...?

"சதை கூழாய்ப் போறதுக்குள்ளே உண்மைகளைச் சொல்லிட்டா பரவாயில்லை... இல்லேன்னா..." லட்டிகளை சைகையால் காட்டினான்.

"நா... நான் உங்களை ஃபாலோ பண்ணலை... அந்த ஹோட்டல்ல டிபன் சாப்பிடத்தான் வந்தேன்..."

தோள்பட்டையின் மேல் ராட்சஸத்தனமாய் விழுந்தது அந்த லாட்டி அடி.

"ஹம்மா... ஆ..."

"இது சாம்பிள்... குறடு வெச்சு... ஒவ்வொரு நகமா பிடுங்கும்போது இன்னும் வலிக்கும். அதையெல்லாம் தாங்கிக்குவியா...?"

ராஜய்யன் பயத்தில் வியர்த்தான்.



"ம்... சொல்லு... என்னை எதுக்காக ஃபாலோ பண்ணினே?"

"வந்து... வந்து..."

லாட்டி வயிற்றில் இறங்கியது.

"ஹ..."

"சொல்லு..."

லாட்டிகள் மூர்க்கமாய் இறங்க, ராஜய்யன் அலறினான்.

"சொல்லிடறேன் ஸார்." சொல்ல ஆரம்பித்தான்.

அவன் சொல்லச் சொல்ல - டாக்டர் மோகன் குமார், கமலா, பால்ராஜ் கோஷ்டியின் சித்து விளையாட்டைக் கேட்டுப் பிரமித்தார்கள்.

அரைமணி நேரத்துக்குப் பிறகு-

ஒரு தனி போலீஸ்படை இரண்டு வேன்களில் குன்னூரை நோக்கிப் புறப்பட ஆயத்தமாயிற்று.

★ ★ ★

MithraVintha